விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 26 செவ்வாய்க்கிழமை (09.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 111

## யாழில் இராணுவத்தினருக்கு என
# காணிகள் எதனையும் சுவீகரிக்க முடியாது

### யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

*(யாழ்ப்பாணம்)*

*யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினருக்கு என காணிகளை சுவீகரிக்க முடியாது என யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*(23ஆம் பக்கம் பார்க்க)*



## கூட்டமைப்பினரை குறை கூற முடியாது

ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



23

## சுதந்திரக் கட்சியுடன் பேச்சுவார்த்தை தொடரும் - மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான பேச்சுவார்த்தை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொலன்னறுவைக்கு நேற்று அவர் மேற்கொண்ட விஜ 23

## இராணுவத்தினரின் தேவைக்காக
## யாழில் 43 இடங்களில் காணி சுவீகரிக்க திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில், கடற்படை மற்றும் இராணுவத்தின் தேவைகளுக்காக 43 இடங்களில் உள்ள காணிகளைச் சுவீகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நேற்று இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டது.

எனினும், இந்தக் காணிகளை சுவீகரிப்பதற்காக, அவற்றை அளவீடு செய்வதற்கு தங்களால் அனுமதிக்க முடியாது என்றும் 23

## ஜனாதிபதி மைத்திரி மீது குற்றவியல் பிரேரணை

### இரகசிய முயற்சியில் ஐ.தே.க.

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது பாராளுமன்றத்தில் குற்றவியல் பிரேரணையொன்றை சமர்ப்பிக்கும் முன்முயற்சிகளில் ஐ.தே.க இரகசிய முயற்சியில் இறங்கியுள்ளதென்ற தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.தே.கவின் பின்வரிசை எம்.பிக்களின் மூலமே இதற்கான முன்முயற்சிகளை ஐ.தே.க 23

அன்பு வாசகர்களே...

கம்பவாரிதி
இ.ஜெயராஜ்
அவர்களுக்கு
புருசோத்தமன்
எழுதும் கடிதம்
இன்றைய
வலம்புரியில்...
வாசிக்கத் தவறாதீர்கள்...!

## நாங்கள் நினைத்தால் அரசை எந்நேரத்திலும் கவிழ்ப்போம்

### இரா.சம்பந்தன் எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு தனித்து இயங்கக்கூடிய பலம் இல்லை. பாராளுமன்றத்தில் 113 பேர் கூட ரணில் அரசுக்கு இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேராதரவுடன்தான் இந்த அரசு இயங்குகின்றது. எமது ஆதரவுடன்தான் 119 வாக்குகளுடன் வரவு - செலவுத் திட்டம் 23

## இரணைமடுக்குளம் தொடர்பில்
## அறிக்கையில் கூறப்பட்டதை உடன் நடைமுறைப்படுத்துக

### பிரதம செயலருக்கு ஆளுநர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ள இடருக்கு இரணைமடுக் குளத்தின் பராமரிப்பு முகாமைத்துவத்தின் தவறு காரணம் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட 23

## ஊடகச் செய்தி தொடர்பில்
## வட மாகாண மருத்துவர் மன்றம் தன்னிலை விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 06.04.2019 ஆம் திகதி ஊடகம் ஒன்றில் வட மாகாண மருத்துவர் மன்றம் அனுப்பிய செய்திக் குறிப்பெனக் குறிப்பிட்டு "இருதய சத்திரசிகிச்சை விடுதியை உடனடியாக இயக்குமாறு பணிப்பு. நோயாளரை நிபுணர்கள் பணத்திற்காக ஏய்த்த அவலமும் போட்டுடைப்பு" என்ற தலைப்பில் செய்தி ஒன்று வெளியாகியிருந்தது எனக் குறிப்பிட்டு. வட மாகாண 23

## தீக்காயத்துக்குள்ளான
## குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயத்துக்குள்ளான 3 பிள்ளைகளின் தந்தை ஒருவர் இரண்டு நாட்களின் பின்னர் 24

## கம்பரலிய பெயர் பலகை வடக்குக்கு தேவையில்லை

### அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

துரித கிராம எழுச்சித்திட்டம் (கம்பரலிய) வேலைத்திட்டத்திற்காக பொது நிதியில் பயன்படுத்தப்படும் பெயர் பலகைகள் வடக்குக்கு தேவையில்லை என யாழ் மாவட்ட அபிவிருத்தி குழு் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டஅபவிருத்திக்குழு கூட்டம் நேற்று யாழ் 02

## இந்துக்களின் பிரச்சினை தொடர்பில்
## நல்லை ஆதீன குருமுதல்வருடன் ஆளுநர் சுரேன் ராகவன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மற்றும் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் யாழ். நல்லை ஞானசம்பந்தர் 23

## அதிக வெப்பம் காரணமாக நோய்கள் பரவும் அபாயம்

### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

நிலவிவரும் அதிக வெப்பமான வானிலை காரணமாக, நோய்கள் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக பொகவந்தலாவ பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில், வயிற்றோட்டம், வாந்தி காரணமாக, சிகிச்சை பெறுவோரின் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பரலிய பெயர் பல...

மாவட்டசெயலகத்தில் இடம்பெற்றது. அதன் போது கருத்து தெரிவித்த வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவ ஞானம், கம்பரலிய எனஅழைக்கப்படும் துரித கிராம எழுச்சி திட்டம் தெற்கில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டம்.

அந்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் போது திட்டத்தின் பொது நிதியில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்களின் புகைப்படத்துடன் பெயர்ப் பலகை பயன்படுத்தப்படுகிறது. அந்தபெயர் பலகைக்கு 6 ஆயிரம் ரூபாய் செலவளிக்கப்படுகிறது. அந்த நிதியில் வேறு வேலைத் திட்டத்தை மேற்கொள்ளமுடியும்.

மேலும் அரச திணைக்களங்கள் கம்பரலிய என்ற பெயரை தான் அனைத்து இடங்களிலும் பயன்படுத்துகிறார்கள். எனவே இந்த விடயம் குறித்து பரிசீலிக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டினார்.

அதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன் எஸ்.சிறீதரன் ஆகியோர், இந்த திட்டம் அரசால் மேற்கொள்ளப்பட்டது. எமக்கு பெயர் பலகை முக்கியமில்லை இதை தீர்மானமாக எடுத்து அரசுக்கு இது குறித்து தெரியப்படுத்துவோம் என தெரிவித்தனர். (மு-9)


## ஐங்கரன் இசைக்குழு தொடர்புகளுக்கு

யாழ். குடாநாட்டின் முன்னணி கலைஞர்களும், இலங்கை வானொலி புகழ் கலைஞர்களும், தென்னிந்திய சுப்பர் சிங்கர் கலைஞர்களும் இணைந்து வழங்கும் யாழ்.நகர் **ஐங்கரன் இசைக்குழுவினரின்** வசந்த ராகங்கள்
(நடன நிகழ்வுகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.)

தொடர்புகளுக்கு:

**மோகன் சவுண்ட்ஸ்,**
**நாச்சிமார் கோவிலடி.**
**0777030234**

**கே.கண்ணன்**
**இயக்குநர்**
**0779184067/0773045015**

## வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**


# கண்ணீர் அஞ்சலி



## திருமதி பார்வதிதேவி சிவானந்தம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உடற்கூற்றியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றும் **திருமதி சிவநந்தினி உதயகுமார்** அவர்களின் அன்புத் தாயார் **திருமதி பார்வதிதேவி சிவானந்தம்** அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்விசார், கல்விசாரா ஊழியர்கள்,**
**உடற்கூற்றியல்துறை, மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்.**

(சி-6040)

# க.பொ.த (சா.த) - 2018 இல் 9A அதிவிசேட சித்தியைப் பெற்ற A/L 2021 உயர்தர மாணவர்களே!

**யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவ சங்கம் வழங்கும்**
**Rs.140,000 பெறுமதியான புலமைப்பரிசில் - 2019 (A/L 2021)**

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவ சங்கம் கடந்த வருடம் 2018 இலிருந்து ஆண்டுதோறும் 9A அதிவிசேட, சித்தியைப்பெற்ற யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களுக்கும் வேறு பாடசாலையில் கல்வி கற்று 9A அதிவிசேட சித்திகளைப் பெற்று யாழ்.மத்திய கல்லூரியில் உயர்தர பிரிவிற்கு இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கும் மாதந்தோறும் Rs.5,000.00 வீதம் 28 மாதங்களுக்கு Rs.140,000.00 பெறுமதியான புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த க.பொ.த. (சா.த) - 2017 இல் 9A அதிவிசேட சித்தியைப்பெற்ற யாழ்.மத்திய கல்லூரி மாணவன் ச.தேனுஜன் அவர்களுக்கு யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவன் திரு. க.கலாவண்ணன் B.A (Hons) அவர்களினால் வழங்கப்பட்ட Rs.140, 000.00 நிதியிலிருந்து புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகின்றது.

இம்முறை க.பொ.த. (சா.த) - 2018 இல் 9A அதிவிசேட சித்தியைப்பெற்ற யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் ப.கிரிசரன் மற்றும் ப.குணராஜ் அவர்களுக்கு யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் Dr.சபீல் சலீம் BMBS மற்றும் திரு.R.ரஜீவன் அவர்களினால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து Rs.140,000.00 பெறுமதியான புலமைப்பரிசில் எதிர்வரும் மாதத்திலிருந்து வழங்கப்படவுள்ளது.

வேறு பாடசாலையில் க.பொ.த. (சா.த)- 2018இல் 9A அதிவிசேட சித்திகளைப் பெற்று யாழ். மத்திய கல்லூரியில் உயர்தர பிரிவிற்கு இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு Rs.140,000.00 பெறுமதியான புலமைப்பரிசில் வழங்கப்பட விருப்பதால் அம்மாணவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு திரு. R.L.சொலமன் (President) 0772334215, Rev.S.A.றொசான் (Asst.Secretary) 0773043470, திரு.A.கபில்நேசன் (Treasurer) 0771457159 மற்றும் என்னுடன் 0777642379 தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்

**யாழ். மத்திய கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**

**திரு.ம.வித்தியானந்தநேசன்**
**M.Phil**
**செயலாளர்**

"Central's Flag must never be lowered"

(சி-6038)

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 06 . 1951

மறைவு 08 . 04 . 2019

## கணபதிப்பிள்ளை சிவகுமாரன்

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்- யாழ். போதனா வைத்தியசாலை)

ஆவரங்காலை பிறப்பிடமாகவும், புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவகுமாரன் அவர்கள் நேற்று (08.04.2019) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (வாதரோக வைத்தியர்) - ருக்மணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், அனுஷா, சசிகரன் (டுபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவகன், ஜெனார்த்தனி ஆகியோரின் அன்பு மாமனாரும், லாவன்யா, ஹர்ஷாவர்தன், சஜனிகா ஆகியோரின் அன்பு பேரனும், செல்லத்துரை, சுந்தரேசன் (கனடா), சோமசேகரம், அமிர்தவல்லி (இந்தியா), சுந்தரவல்லி, சவுந்தரவல்லி (பிரான்ஸ்), காலஞ்சென்ற முரளிதரன், வாசுதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2019) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புலோலி தெற்கு,**
**புலோலி.**

**தகவல் : குடும்பத்தினர்**
**021 226 1245, 076 411 6333**

(சி-6041)








சுதுமலை திருவருள்மிகு
ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம்
புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ பிரதிஸ்டா

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கர்மாரம்பம் : 08.04.2019 திங்கட்கிழமை காலை 6.07 - 7.07 மணிக்குள்
எண்ணெய்க்காப்பு : 11.04.2019 வியாழக்கிழமை காலை 7.00 - மாலை 4.00 மணி வரை
மஹா கும்பாபிஷேகம் : 12.04.2019 வெள்ளிக்கிழமை காலை 8.10 மணி முதல் 10.10 மணிக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகலில் இராணுவம் கைது செய்த 27 குழந்தைகளுக்கு நடந்தது என்ன?



## சிவசக்தி ஆனந்தன் கேள்வி

(வட்டுவாகல்)

**இறுதிப் போரில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட 500 இற்கும் மேற்பட்ட போராளிகள் மற்றும் 27 குழந்தைகளுக்கு என்ன நடந்தது? என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலிருந்து வட்டுவாகல் கடற்படை முகாம்வரை பேரணியாக சென்று கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பேரணியில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேலும் தெரிவிக்கையில்,

இறுதிப்போரில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட 500 இற்கும் மேற்பட்ட போராளிகள் மற்றும் 27 குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கடந்த பத்து வருட காலமாக தங்கள் உறவுகளை தேடிக்கொண்டு பல போராட்டங்களை நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள்.

உயிருடன் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்கள் தற்போது உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? என்ற பதிலை முன்னாள் ஆட்சியாளர்களும் சரி இந்நாள் ஆட்சியாளர்களும் சரி வழங்கவில்லை.

அரசாங்கத்தின் கொடூரத் தன்மையின் முக்கிய விடயமாக போராளிகளோடு கைது செய்யப்பட்ட 27 குழந்தைகளின் நிலை என்ன? அவர்களுக்கு என்ன நடந்தது? என அரசு கூற மறுப்பது ஏன் என்ற கேள்வியையும் அவர் முன்வைத்தார். (இ-7)

## தமிழ் அரசியல்வாதிகள் அரசிற்கு துணைபோவதை ஏற்றுக்கொள்ள முடியாது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

தமிழ் அரசியல்வாதிகள் அரசிற்கு துணைபோவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளை கையளித்த வட்டுவாகல் பாலம் வரை சென்று அங்கு பாரிய கவனயீர்ப்பு நடவடிக்கையை உறவினர்கள் முன்னெடுத்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்,இலங்கை அரசிற்கு கால அவகாசம் கொடுத்ததை ஏற்றுக் கொள்ள முடியாது. அதனால்தான் இந்தப் போராட்டத்தை மேற்கொள்கின்றோம்.

எங்களுக்கு தீர்வு தருவோம் என்று தெரிவித்து அரசிற்கு கால அவகாசம் கொடுத்துள்ளார்கள். இதில் என்ன தீர்வு வரும் என்று எங்களுக்குத் தெரியாது. இந்த வட்டுவாகல் பாலத்தில் எங்கள் உறவுகளைக் கையளித்துள்ளோம். இவற்றை அடையாளப்படுத்தித் தான் நாங்கள் போராட்டத்தை மேற்கொண்டுள்ளோம்.

காணாமல் போனவர்கள் இருக்கின்றார்களா? இல்லையா? என்ற பதில் இதுவரைக்கும் கிடைக்கவில்லை குற்றம் புரிந்த படையினருக்கு சாதகமாக அவர்கள் தப்பித்துக்கொள்வதற்காக நாங்கள் குரல் கொடுத்ததையும் விளங்கியும் விளங்கிக்கொள்ளாத மாதிரி எங்கள் தமிழ் அரசியல்வாதிகளும் அரசிற்கு துணைபோவதை எங்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களை நம்பித்தான் நாங்கள் இந்தப் போராட்டங்களை நடத்தினோம்.

எங்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்று கத்தினோம். ஆனால் அவர்கள் படையினரையும் நாட்டின் ஜனாதிபதியையும் தங்களால் முடிந்தளவிற்கு காப்பாற்றி இருக்கின்றார்கள். எங்கள் பிரச்சினைக்கான தீர்வு இன்னும் தரவில்லை.

இந்தப் போராட்டத்தை நாங்கள் விடப்போவதில்லை எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது? என்று நீதி கிடைக்கும் வரை நாங்கள் தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொள்வோம்.

தமிழ் அரசியல் வாதிகளுக்கு நாங்கள் எச்சரிக்கின்றோம். இந்த கால இழுத்தடிப்பு ஏன் கொடுத்தீர்கள் என்று தெரியாது. உண்மையில் எங்கள் மீது கருணை இருந்தால் அதற்கான பதிலை விரைவாக தரவேண்டும்.

சர்வதேசம்தான் எங்களுக்கான நீதியினை பெற்றுத்தரவேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-28)

## போதைப்பொருள் மற்றும் ஆட்கடத்தலை ஒழிக்க இந்தியா - இலங்கை புதிய நிகழ்ச்சித்திட்டம்

(கொழும்பு)

சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளை ஒழிப்பதில் இந்தியாவும் இலங்கையும் இணைந்து புதிய ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் சன்ஜே மித்ரா நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தபோதே இது பற்றி கலந்துரையாடப்பட்டது.

பிராந்திய பாதுகாப்பிற்காக சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளை ஒழிப்பதில் இந்தியா மற்றும் இலங்கைக்கிடையிலான ஒத்துழைப்பின் மூலம் இணக்கப்பாட்டுடன் செயற்படுவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் இலங்கை பாதுகாப்பு படையினருக்கு இந்திய அரசாங்கம் வழங்கும் பயற்சி குறித்து நன்றியை தெரிவித்த ஜனாதிபதி இதனை இன்னும் அதிகரிப்பதற்கு உதவுமாறும் கேட்டுக் கொண்டார்.

இந்த விடயம் தொடர்பில் இந்திய பாதுகாப்பு செயலாளர் கவனம் செலுத்தியுள்ளார்.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவது குறித்தும் இதுபற்றி தொடர்ந்தும் கருத்துக்களை பரிமாறிக்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்ட வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து இரண்டு நாடுகளினதும் பாதுகாப்புச் செயலாளர்கள் இணைந்து கலந்துரையாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித்சிங் சந்து ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

## இயந்திரக் கோளாறு காரணமாக சொகுசு பேருந்து தீக்கிரை!



(ஹபரண)

தம்புள்ளை-ஹபரண பிரதான வீதியில் திகம்பதன பிரதேசத்தில் நேற்று அதிகாலை, சொகுசு பேருந்து ஒன்று முழுவதுமாகத் தீப்பற்றி எரிந்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இந்த பேருந்து குருநாகலிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணஞ்செய்த வேளையிலேயே இந்த தீப்பரவல் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பேருந்தில் ஏற்பட்டிருக்கும் இயந்திரக் கோளாறு காரணமாக இந்த விபத்து நேர்ந்திருக்கலாமெனத் தெரிவித்த பொலிஸார், தீ விபத்து நேர்ந்த வேளையில் குறித்த பேருந்தில், சாரதி மட்டுமே இருந்ததாகவும் தெரிவித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டையைக் கிளப்பிய பஞ்சாப்

## இறுதி ஓவரில் ஹைதராபாத்தை வீழ்த்தியது


அரைச்சதம் அடித்த பஞ்சாபின் மயங்க் அகர்வால்

ஐ.பி.எல்., தொடர் லீக் போட்டியில் பஞ்சாப் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ஹைதராபாத்தை வீழ்த்தியது. பஞ்சாப் அணியின் லோகேஷ் ராகுல், மயங்க் அகர்வால் அரைச்சதம் விளாசி வெற்றிக்கு கைகொடுத்தனர்.

இந்தியாவில் 12ஆவது ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் நேற்று மொகாலியில் நடந்த லீக் போட்டியில் பஞ்சாப், ஹைதராபாத் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணியின் தலைவர் அஷ்வின் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

பஞ்சாப் அணியில் அன்ட்ரூ ரை, முருகன் அஷ்வின் நீக்கப்பட்டு முஜீப் ரஹ்மான், அன்கித் ராஜ்புத் சேர்க்கப்பட்டனர். ஹைதராபாத் அணியில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

### ஆரம்பம் மந்தம்

ஹைதராபாத் அணிக்கு பேர்ஸ்டோவ், வோர்னர் ஜோடி மோசமான ஆரம்பம்கொடுத்தது. பஞ்சாப் அணி பந்துவீச்சாளர்கள் மிரட்டினர். 6 பந்துகளில் ஒரு ஓட்டம் மட்டும் எடுத்த பேர்ஸ்டோவ், முஜீப் சுழலில் சிக்கினார். வோர்னருடன் தமிழகத்தின் விஜய் சங்கர் இணைந்தார்.

வந்த வேகத்தில் முஜீப் பந்தைபவுண்டரிக்கு விரட்டினார் விஜய் சங்கர். இதன் பின் இருவரும் ஒன்றும் இரண்டுமாக ஓட்டங்கள் சேர்த்தனர். ராஜ்பூத் பந்தில் வோர்னர் ஒரு பவுண்டரி அடித்த போதும், 'பவர் பிளே' ஓவர் (6) முடிவில் ஹைதராபாத் அணி 27/1 ஓட்டங்கள் மட்டும் எடுத்திருந்தது.

தொடர்ந்து பஞ்சாப் அணி வீரர்களின் பந்துவீச்சு, களத்தடுப்பு துல்லியமாக அமைய, ஹைதராபாத் அணி 10 ஓவரில் 50/1 ஓட்டங்கள் எடுத்தது.

### வோர்னர் அரைச்சதம்

அடுத்து 11வது ஓவரை வீசினார் அஷ்வின். முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய விஜய் சங்கர் (26), 4வது பந்தில் 'பிடி' கொடுத்தார். மறுபக்கம் வோர்னர் தன் பங்கிற்கு அஷ்வின், முஜீப் பந்துகளில் பவுண்டரிகள் விளாசினார்.

இவருக்கு கைகொடுக்க வந்த மொஹமட் நபி (12) ரன் அவுட்டானார். சுதாகரித்துக் கொண்ட வோர்னர், முஜீப் பந்தில் இப் போட்டியின் முதல் சிக்சர் அடித்த வோர்னர், அரைசதம் எட்டினார்.

மொஹமட் ஷமி வீசிய போட்டியின் 17 வது ஓவரில் வோர்னர், மணிஷ் பாண்டே தலா ஒரு பவுண்டரி அடித்தனர். அடுத்து கர்ரான் ஓவரிலும் இரு பவுண்டரிகள் விளாசினர். இந் நிலையில் ஷமி வேகத்தில் மணிஷ் பாண்டே (19) கிளம்பினார்.

பின் வந்த தீபக் ஹூடா, கடைசி 3 பந்துகளில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்சர் அடித்தார்.

20 ஓவர்களில் ஹைதராபாத் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்கள் எடுத்தது. வோர்னர் (70), ஹூடா (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### இரண்டு அரைச்சதம்

எளிய இலக்கைத் துரத்திய பஞ்சாப் அணிக்கு லோகேஷ் ராகுல், கிறிஸ் கெய்ல் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. கெய்ல் 16 ஓட்டங்கள் எடுத்தார். பின் இணைந்த ராகுல், மயங்க் அகர் வால் ஜோடி சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தியது.

மொஹமட் நபி பந்துகளில் சிக்சர்கள் அடித்த மயங்க், சித்தார்த் பந்தை பவுண்டரிக்கு அனுப்பினார். இவருக்கு 'கம்பெனி' கொடுத்த ராகுல், அவ்வப்போது பவுண்டரிகள் அடிக்க ஓட்ட எண்ணிக்கை வேகமாகச் சென் றது.

ராகுல் மயங்க்இருவரும்அரைச்சதம் எட்டினர். 2வது விக்கெட்டுக்காக 114 ஓட்டங்கள் சேர்த்த போது மயங்க் (55) ஆட்டமிழந்தார். மில்லர் (1) ஏமாற்ற, கடைசி ஓவரில் பஞ்சாப் வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

மொஹமட் நபி வீசினார். முதல் மூன்று பந்தில் 5 ஓட் டங் கள் எடுக்கப்பட்டன. 4ஆவது பந் தில் பவுண்டரி அடித்த ராகுல், அடுத்த பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்தார். பஞ்சாப் அணி 19.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்கள் எடுத்து 'திரில்' வெற்றி பெற்றது. ராகுல் ((71), கர்ரான் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### அஷ்வின் மீது பயம்

ஐ.பி.எல்., தொடரில் ராஜஸ்தான் வீரர் பட்லரை, பஞ்சாப் அணித் தலைவர் அஷ்வின் 'மன்கேடிங்' முறையில் ரன் அவுட்டாக்கினார். நேற்று ஹைதராபாத் அணி வீரர் வோர்னர், அஷ்வின் பந்து வீசிய போது மிக எச்சரிக்கையாக கிரீசில் துடுப்பை வைத்து நின்றார். அதேநேரம் முஜீப் வீசிய போது, சாதாரணமாக நின்று கொண்டிருந்தார்.


# நன்றி நவில்கின்றோம்

**கௌரவ அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க**

பாரிய நகரம் மற்றும் மேற்கத்தைய அபிவிருத்தி அமைச்சு

**கௌரவ இம்மானுவல் ஆனல்ட்**

முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்

**திரு.என்.பீ.கே.ரணவீர**

பணிப்பாளர் (வடக்கு மாகாணம்)

நகர அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்

**வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர்** யாழ்ப்பாணம்

**பிரதம பொறுப்பதிகாரி** பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம்

**பொறுப்பதிகாரி சிறுகுற்றத்தடுப்பு பிரிவு** பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம்

**உத்தியோகத்தர்கள்,** நகர அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.

**உத்தியோகத்தர்கள்,** மாநகர சபை, யாழ்ப்பாணம்.

ஆகியோர் தங்களது உத்தம பங்களிப்புடனான நேர்மைத்தன்மைமிக்க சேவையின் மூலம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை 'கொழும்புத்துறை தென்னந்தோட்டம்', இல.503 இல் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட பாதையினை மூடுவதற்கான நடவடிக்கையினை திறம்பட முன்னெடுத்து அரச சேவையின் உன்னதத்தினை பேணி நின்றமைக்காகவும் சமூக நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டமைக்காகவும் இவ் வதிவிடப் பகுதி குடியிருப்பாளர்கள் சார்பாக எமது பாராட்டுக்களையும் இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சட்டபூர்வமான குடியிருப்பாளர்கள்**
**இல.503, 'கொழும்புத்துறை தென்னந்தோட்டம்'**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

(8410)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட காணி சுவீகரிப்பு விடயத்தில் மக்கள் நலன்சார்ந்து செயலாற்ற வேண்டும்

## அதிகாரிகளுக்கு மாவை எம்.பி.அறிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் காணி சுவீகரிப்பு விடயத்தில் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, பொது மக்கள் நலன் சார்ந்து உரிய முறையில் செயலாற்ற வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்கு 3 ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி விசேடமாக ஒதுக்கப்பட வேண்டுமென கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் விடயத்தில் தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டுமென முன்மொழிந்துள்ளோம்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத்தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. ஜனாதிபதி நிறை வேற்று அதிகாரம் கொண்டவராக இருந்தாலும், 19 ஆம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம், ஜனாதிபதியின் தவறுகளை சுட்டிக்காட்டி, உச்ச நீதிமன்றால் தீர்மானம் எடுக்கப்பட்ட விடயங்களை மறந்து விடக்கூடாது.

நிறைவேற்று அதிகார முறையின் கீழ் வரும் ஆளுநர்களும் தன்னிச்சையாக செயற்பட முடியுமென எண்ணி விடக்கூடாது. அது ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு எவ்வாறு ஒரு அரசியலமைப்பு ரீதியாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதோ, அதன்படி, மாகாண சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களை ஆளுநர்களும் தன்னிச்சையாக செயற்படுத்த முடியாது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் வழிநடத்தல் குழு மூலம் வடகிழக்கில் முக்கிய தீர்மானங் களை நடைமுறைப் படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக, மீள்குடியேற்றம் மற்றும் காணி சுவீகரிப்பு விடயங்கள் தொடர்பில் நாங்கள் விரிவாக ஆராய வேண்டும். அண்மையில் பெரும் சோகத்தினை ஏற்படுத்தும் விடயம் இடம்பெற்றுள்ளது. பாராளுமன்றில் கொண்டு வரும் பிரேரணைகளையோ, பொது மக்களின் பிரேரணைகளையோ தெரியாது. வலி. வடக்குப் பிரதேசத்தில் 3 இடங்களை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட இருந்தது.

அதனைவிட நிலத்தை அளந்து, சுவீகரிப்பதற்கான அறிவித்தலும் கொடுக்கப்பட்டிருந்தது. பிரதேச செயலாளர்களுக்கு இருக்கும் தற்துணிவின் பிரகாரம், காங்கேசன்துறையில் உள்ள இராணுவத்தினரால் நடத்தப்படும் தல்செவன விடுதியை மையமாகக் கொண்டு, அதனைவிட 30 ஏக்கர் காணிகள், பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுச் சொத்துக்கள், பொது மக்களின் காணிகள் உட்பட விடுவிக்கப்பட்ட காணிகளை சுற்றுலா தளமாக கொண்டு நடத்துவதற்கு காணிகள் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

ஜே/234 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும், கீரிமலை நகுலேஸ்வரம் பிரதேசம் ஒரு புனித பிரதேசம், அதில் 62 ஏக்கர் காணிகள் சுவீகரிப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, மகிந்த ராஜபக்ஷவால், அதிகாரமற்ற முறையில் கட்டப்பட்ட மாளிகையும் சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவிருந்தது.

இவ்வாறான நில சுவீகரிப்பு விடயங்களை தற்போது தடுத்து நிறுத்தியிருக்கின்றோம். சீமெந்து தொழிற்சாலைக்கு அருகாமையில் 734 ஏக்கர் காணி சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட விருந்த போது, சீமெந்துச் தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள சுண்ணாம்புக்கற்கள் அகழ முடியாது. அவ்வாறு சுண்ணாம்புக் கற்கள் அகழ்வதனால், சுற்றுச் சூழல் மாசடைகின்றதுடன், தண்ணீர் மாசடைகின்றது.



சீமெந்துச் தொழிற்சாலையை மீள இயக்கி, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தியிருக்கின்றோம். சீமெந்து தொழிற்சாலை பகுதியில் 600 ற்கும் மேற்பட்ட காணிகளை சுவீகரிக்க மகிந்த பிரதமர் ஆகிய காலத்தில் தீர்மானிக்கப் பட்ட போதிலும், அந்தக் காணி சுவீகரிப்பை வர்த்தமானியில் அறிவிக்க முடியா தென, திணைக்களத்தில் செயலாளர் அந்த அறிக்கையை எம்மிடம் தந்துள்ளார்.

சுவீகரிக்கப்படவுள்ள காணிகளை சுவீகரிக்கக் கூடாதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அரைகுறை அதிகாரங்களைப் பயன்படுத்தி அதிகாரிகள் சில நட வடிக்கைகளை முன்னெடுகின்றார்கள். காணி சுவீ கரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளிவர வில்லை.

காணி சுவீகரிப்பு தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு வரும் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்காது. பொது மக்களின் நலன்களுக்கு எதிராக செயற்படாது மிகவும் கவனமாக பிரதேச செயலாளர்கள் செயற்பட வேண்டும்.

இவ்வாறான பிரச்சினைகள் வரும்போது, பிரதேச செயலாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும், ஒருங்கிணைப்பு குழு தலைவர்களுடனும் கலந்துரையாடி தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

காணி சுவீகரிப்பதற்கான உரிய காரணங்களை ஜனாதிபதிக்கும் காணி அமைச்சுக்கும் அறிவிக்காது சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான காணி சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளில் பிரதேச செயலாளர்கள் உரிய கவனம் எடுத்து செயற்பட வேண்டும்.

முறையாக தீர்மானிக்கப் பட்ட அமைச்சரவை தீர்மானம் ஜனாதிபதி செயலணியின் தீர்மானங்கள் இன்றி காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் அத்னோடு சம்பந்தப்பட்ட விடயங்களாக இருப்பின் அவதானமாக செயற்பட வேண்டும்.

சீமெந்து தொழிற்சாலைக்குரிய காணியில் 330 ஏக்கரை தொழிற் சாலை அமைப்பதற்கான நடவடிக்கைக்கான முதற்கட்டமாக 100 ஏக்கர் காணிகளாக பிரித்து நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் அமைச்சரவை பத்திரமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்காக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 5 ஆயிரமாக இருந்த வீட்டுத்திட்டம் 15 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

எனவே, எமது பொது மக்களின் விடயங்களில் அரச அதிகாரிகள் மற்றும் ஏனையோர் சரியான முறையில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளைப் கையாள வேண்டுமென்றும் மாவை. வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-101)


## ஏல விற்பனை

**யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் பழைய கட்டடப் பொருட்கள்**

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் கட்டடத் திருத்தத்தின் போது பழைய கட்டடத்திலிருந்து அகற்றப்பட்ட கதவுகள், ஜன்னல்கள், அயன் கிறில், மரச்சட்டங்கள் போன்ற பொருட்கள் 23.04.2019 செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலய வளாகத்தில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. மேலதிக விபரங்களை பாடசாலை நேரத்தில் பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

(8401)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

அமரர் தங்கராசா–கேசவதாஸ்

(திவானி கட்டட ஒப்பந்தகாரர்)



மண்ணில் 31.12.1972 விண்ணில் 25.02.2019

கடந்த 25.02.2019 திங்கட்கிழமை சிவபத மெய்திய எமது குடும்பத் தலைவர் அமரர் **தங்கராசா கேசவதாஸ்** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.04.2019 நாளை புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

இங்ஙனம்: மனைவி, பிள்ளைகள்

077 087 3461

(சி-6023)


## இராசி பலன்

**மீனம்**: மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் நலனில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மேடம்**: விரதம் வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், வேலைச் சுமை கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**இடபம்**: எதிலும் பொறுமையாக செயற்படுவது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மிதுனம்**: தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்**: சுதந்திரமாகச் செயற்படுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

**கடகம்**: நம்பிக்கைகள் நடைபெறும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**மகரம்**: அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வாகன சுகமுண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வழிபிறக்கும்.

**சிம்மம்**: மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளித்து விலகுவீர்கள், சுய முயற்சியின் மூலம் முன்னேற்றம் காண்பீர்கள், மாலை நேரம் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | சந் | செவ் | ராகு |
| சுக் | | | |
| | | | |
| சனி, கேது, குரு | | | |

**இராசி பலன்**

கிரகநிலை
சந்திராஷ்டமம்
அனுசம்
மாலை 3.28 மணிக்கு
இடப- சந்திரன்

**09.04.2019**

பங்குனி 26, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 3.14 மணிவரை
கார்த்திகை முற்பகல் 9.38 மணிவரை
சுபநேரம் 10.37-12.07 மணிவரை
இராகுகாலம் 3.07-4.37 மணிவரை
சதுர்த்தி விரதம்,
சித்தாமிர்தம்

வளவன்

**தனுசு**: பொன்னான எதிர்காலம் அமைய புதிய வழிபிறக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**: இல்லத்தில் உள்ளவர்களின் தேவைகள் பூர்த்தியாகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்**: முக்கிய காரியங்களை மாலை நேரத்திற்கு முன்னர் செய்து முடிப்பது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் கூடும், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி**: சுணங்கிய காரியங்களில் மாலை நேரம் முன்னேற்றம் காண்பீர்கள், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் நன்மைதரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமை கோரவும்


(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிமன்றில் AR/ 285/19, AR/ 286/ 19, AR/ 287/19, AR/288/ 19 ஆகிய வழக்குகளில் உரிமை கோரப்படாத துவிச்சக்கரவண்டிகள் சுன்னாகம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ளதால் அதனை உரிமை கோருபவர்கள் 06 மாத காலத்திற்குள் உரிய ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்து அரச உடைமையாக்கப்படும் என மல்லாகம் பமாவட்ட நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)




# அறுகுவெளியில் உப்பளம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பம்





யாழ்ப்பாணத்தில் 200 மில்லியன் ரூபா நிதியில் உப்பளம் உற்பத்தி நீரேற்றும் நிகழ்வு சம்பிரதாயபூர்வமாக நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் கந்தையா வாமதேவன் தலைமையில் நேற்று காலை உப்பளத்திற்கு நீரேற்றும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தனங்கிளப்பு அறுகுவெளிப் பகுதியில் உப்பு உற்பத்தி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு, உப்பு உற்பத்தி நீரேற்றி வைக்கப்பட்டது.

தனங்கிளப்பு அறுகுவெளிப் பகுதியில் சுமார் 100 ஏக்கர் காணியில் லண்டன் முதலீட்டாளர் கந்தையா பிரேமதாஸ் மற்றும் ஆனந்தா உப்பு உற்பத்தி நிறுவனமும் இணைந்து, சகாதேவன் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வி.சகாதேவனின் ஆலோசனையின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த உப்பள உற்பத்தி நிறுவனத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக 100 மில்லியன் ரூபா முதலீட்டில் இந்த உப்பு உற்பத்தி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 வருட யுத்தத்தின் போது வடமாகாணத்தில் காணப்பட்ட தொழிற்சாலைகள் அழிவடைந்த பின்னர் இளைஞர்கள் வேலை வாய்ப்பற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில், வடமாகாணத்தில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் அண்மையில் லண்டன் வாழ் முதலீட்டாளர் பிரேமதாஸ் 200 மில்லியன் ரூபா நிதியில் முதலீடு செய்துள்ளார். இந்த முதலீட்டின் அடிப்படையில் முதற்கட்டமாக 100 மில்லியன் ரூபா நிதி முதலீடு செய்யப்பட்டு உப்பு உற்பத்தி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உப்பு உற்பத்தி செய்வதற்கான பாத்திகள் அமைக்கப்பட்டு, அங்கு 100ற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

உப்பு உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான மத்திய சுற்றாடல் சபையின் அதிகாரசபை அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், சுற்றுச் சூழல் மாசடையாத வகையிலும் இந்த உப்பு உற்பத்தி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அ.நிமலரோகன் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் து.சுபோகரன், ஹற்றன்நஷனல் வங்கி முகாமையாளர் எம். டேமியன் ரஞ்சித், பிரதேச கிராமிய வங்கி உதவித் திட்ட முகாமையாளர் கே.தியாகராஜா உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், ஆனந்தா உப்பு உற்பத்தி நிறுவன ஊழியர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (5-10-30-101)

## நிலையான திட்டமிடல் இன்மை விவசாயம் அழியக் காரணம்

### வசந்தி அரசரட்ணம்

(யாழ்ப்பாணம்)

எங்களுடைய பாரம்பரிய மா,பலா, வாழை மற்றும் முருங்கை இனங்கள் இல்லாமல் போய் தற்போது வேறு நாட்டு பயிர் வகைகள் அறிமுகமாகி இருப்பதாக பேராசிரியரும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தருமாகிய வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார். அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற தென்மராட்சியின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

எங்களிடம் இருப்பவற்றை முதலில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். எங்களுடைய பாரம்பரிய மா,பலா, முருங்கை இனங்கள் இல்லாமல் போய்விட்டன. அதற்கு பதிலாக வேறு நாட்டுப் பயிர் வகைகளை அறிமுகப்படுத்துகின்றனர். எமது பிரச்சினைகளை உடனடியாக தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் மற்றும் நீண்ட காலப் பிரச்சினைகள் எனப் பிரித்துப் பார்க்க வேண்டும். சாவகச்சேரி பேருந்து நிலையம், சந்தை ஆகியவற்றை நவீன மயப்படுத்தியதில் எந்தப் பயனும் இல்லை. எம்மிடத்தில் உரிய வகையில் திட்டமிடல் இல்லை. ஒரு நிலையான திட்டமிடல் இல்லாமை தான் விவசாயம் அழியக் காரணம். யாழ்ப்பாணத்தில் தண்ணீர் பிரச்சினை உள்ளது. மழை நீரை சேமிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தீவுப் பகுதிகளில் மழை நீரை சேமிக்கின்றனர். சிறு சிறு திட்டங்களாக சிந்தித்து செயலாற்றி அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் அரசியல் பாகுபாடு இன்றி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-30)

## கீழைத்தேய கல்விக் கல்லூரியில் பட்டையக் கற்கை நெறி ஆரம்பம்

கீழைத்தேயக் கல்விக் கல்லூரியின் தமிழ் ஆசிரியர்களுக்கான புலமை சார் பட்டையக் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக் கற்கை நெறியில் பங்குபற்ற விரும்புவோர் சனி, மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். நல்லூர் வடக்கு புதிய செம்மணி வீதி இல. 20 இல் அமைந்துள்ள கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். மேலதிக தகவல்களுக்கு 077 691 3333 என்ற இலக்கத்துடன் செயலாளர் ம.கடம்பேசுவரனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (5)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

புத்தளம், அபயபுர, அபயராம மாவத்த இல. 24/ 51 என்ற முகவரியைக் கொண்ட வர்ணகுலசூரிய, நிஷங்க றுக்ஷி பெர்னாண்டோ என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர் வலம்புரிப் பத்திரிகை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். (5)



மக்கள் ஆதரவு மையத்தினரால் "கல்விக்கு தோள்கொடுப்போம்" எனும் செயற்றிட்டத்தின் மூலம் யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி மாணவிக்கும், யா/ கோப்பாய் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவனுக்கும் 37,000/- பெறுமதியான 2 துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (படங்கள்: சோபிகா)

## பரு.ஆதார வைத்தியசாலையில் கர்ப்பவதிகளுக்கு விசேட பராமரிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விசேட பராமரிப்பு திட்டமாகிய மொபைல் ஹெல்த் கடந்த வியாழக்கிழமை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி குகதாஸ் தலையில் இடம்பெற்றது.

இலங்கையின் கர்ப்பிணித் தாய்மார்களின் மரணவீதத்தில் யாழ்.மாவட்ட மரண வீதம் அதிகூடியதாக (42) வீதமாகக் காணப்படுகின்றது

கர்ப்பிணித் தாய்மார்களின் மரணமானது முழுக்குடும்பத்தை மட்டும் அன்றி சமுதாயரீதியிலும் பாதிப்பை ஏற்படுத்தும் சம்பவமாகும் இதனைக்கருத்தில் கொண்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நலன் விரும்பிகளின் பங்களிப்புடன் நோயாளர் நலன் விரும்பிச் சங்கமானது மொபைல் ஹெல்த் சேவையை ஆரம்பித்துள்ளது.

மகப்பேற்று நிபுணரினால் சிபாரிசு செய்யப்படும் அதிகூடிய கவனம் செலுத்தப்படவேண்டிய கர்ப்பிணித் தாய்மார்களை வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் உள்ள இலக்க தொலைபேசியுடன் 24 மணிநேர தொடர்பாடல் மூலம் வைத்தியசாலையின் மகப்பேற்று பிரிவில் கொண்டு வருவதற்காகவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட மூன்று கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவகாலம் முடியும் வரை இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படுவார்கள்.

இந்நிகழ்வில் வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி சிவச்சந்திரன் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தி சபை செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக் [illegible] (5-10)

## க.பொ.த (சா/தர) பரீட்சைப் பெறுபேறுகள்-2018

**யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை**

திலக்சனா மகேஸ்வரன்- 6ஏபி2சி, கஜனி குலேந்திரன்- 5ஏபி3சி, காயானா கடம்பகுமார்- 3ஏ3பி3சி, உசானந்தினி உதயராசா- 2ஏ2பி3சி2எஸ், கிரிசாயினி ஞானசேகரம்- 2ஏபி4சி2எஸ், பூர்வஜா ஜெறவிட்ன்சன்- 2ஏ5சி2எஸ்.


## கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாணக் கண்காட்சி -2019

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் "மகளிர் மலர்ச்சியே கிராமிய மறுமலர்ச்சி" என்னும் தொனிப் பொருளிலான "மாகாணக் கண்காட்சி 2019" இன்றும் 9 ஆம் திகதியும் நாளை 10 ஆம் திகதியும் இரு நாட்கள் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ச.மோகநாதன், யாழ். மாவட்ட செயலாளர் நா. வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டுவில் பன்றித் தலைசியம்மன் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் விழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)

# ஒரு அங்குல நிலத்தைக் கூட அளக்க அனுமதிக்க மாட்டோம்

## மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மக்களினுடைய பூர்வீகமான நன்னீர் நிலங்களை கடற்படை முகாம்கள் அமைப்பதற்காக சுவீகரிப்பு செய்ய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள 18 ஏக்கர் நிலத்தில் ஒரு அங்குலத்தைக்கூட அளவீடு செய்வதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் மண்டைதீவிலுள்ள 18 ஏக்கர் தனியார் காணிகளை சுவீகரிப்பதற்காக நாளை மறுதினம் 11 ஆம் திகதி அளவீடு செய்யப்படவுள்ளதாக காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே கஜதீபன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் அளவீட்டு அறிவித்தல்கள் தொடர்பாக அக்காணிகளின் உரிமையாளர்கள் எங்களிடம் தெரியப்படுத்தியுள்ளனர். கடந்த வருடமும் இதே போல் மண்டைதீவிலுள்ள குறித்த காணிகளை கடற்படை முகாம் விஸ்தரிப்புக்காக அளவீடு செய்ய முற்பட்ட போது அந்த மக்களோடு இணைந்து நாங்கள் முன்னெடுத்த எதிர்ப்பினால் அந்த நடவடிக்கைகளை கைவிட்டிருந்தனர்.

ஆனால் மீண்டும் மக்களின் பூர்வீகமான நன்னீர் வளம்கொண்ட நிலங்களை அந்த மக்களின் விருப்பங்களுக்கு மாறாக அளவீடு செய்ய முற்படுவதானது சட்டத்தின் ஆட்சி நடைபெறுகின்றது என்று சொல்லக்கூடிய ஒரு நாட்டில் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகும்.

சட்டத்தின் ஆட்சி நடைமுறையில் இருப்பதாக சிலர் சொல்லிக் கொண்டாலும் அப்படியான நிலை சாதாரண மக்களுக்கு அதிலும் குறிப்பாக தமிழ் மக்களுக்கு இல்லையென்பதற்கு ஒரு உதாரணமாக 11 ஆம் திகதி இடம்பெறவுள்ள காணி அளவீட்டு நடவடிக்கையை மக்கள் பார்க்கின்றார்கள்.

கடந்த 5 ஆம் திகதி இந்த நாட்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு நடைபெற்ற போது அந்த வரவு- செலவுத் திட்டத்தை தமிழ் மக்களுக்கான தீர்வைப்பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டின் ஒருபகுதியாக நல்லிணக்க அடிப்படையில் பெரும்பான்மையான தமிழ்மக்களின் விமர்சனங்களுக்கு மத்தியிலும் கூட தமிழர் தரப்பு ஆதரித்து நின்றது.

ஆனாலும் இப்படியான ஆதரவுகளை கொடுப்பது கூட தவறானதோ என் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் சிந்திக்கின்ற நிலமையை இப்படியான சம்பவங்கள் ஏற்படுத்திவிடும். அதுமட்டுமல்லாமல் இந்த ஆட்சிமீது கடும்அதிருப்தி அடைந்திருக்கும் தமிழ் மக்கள் மனதில் இவ்வாறான காணி சுவீகரிப்பு முனைப்புக்கள் அந்த அதிருப்தி களை இன்னும் அதிகப்படுத்தவே உதவும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உணர்ந்து கொள்வதில்லை.

எது எவ்வாறிருப்பினும் மண்டைதீவிலுள்ள நன்னீர் வளம்மிக்க குறித்த நிலங்களை சுவீகரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியினை மக்கள் எவ்வாறு திரண்டு முறியடித்தார்களோ அதைப்போன்று 11 ஆம் திகதியும் காலை 9மணிக்கு மண்டைதீவு அம்மன் ஆலய முன்றலில் அனைவரும் ஒன்று கூடி காணி அளவீட்டுக்கு எமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி காணி அளவீட்டை நிரந்தரமாக தடுத்து நிறுத்த வேண்டும் என கஜதீபன் மேலும் தெரிவித்தார். (இ-89)

# ஓய்வூதியம் பெற மாதாந்தம் 2200 பேர் இணைகின்றனர்

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியர் திணைக்களத்திற்கு மாதாந்தம் அரச சேவையிலிருந்து 2ஆயிரத்து இருநூறு பேர் வரையில் புதிதாக ஓய்வூதியம் பெற இணைவதாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஓய்வூதியம் பெற்று வருபவர்களில் மாதாந்தம் இறப்போர் தொகை 800 தொடக்கம் 900 வரை காணப்படுகிறது. தற்போது நாடு முழுவதும் 6 இலட்சத்து 25 ஆயிரத்து 359 பேர் ஓய்வூதியம் பெறுவதற்காக மாதாந்தம் 1.568 கோடி ரூபாவை அரச செலவு செய்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# திருட்டு குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபர் தப்பியோட்டம்

## யாழ். நீதிமன்றில் நேற்று சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த அழைத்து வரப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் கீழ் தளத்தினூடாக நேற்றுப் பாய்ந்து தப்பித்துள்ளார்.

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல்வேறு திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொட ர்புடைய வழக்குகள் பல குறித்த சந்தேக நபருக்கெதிராக நீதவான் நீதிமன்றில் உள்ளன.

இந் நிலையில் வழக்குகளாக குறித்த நபரைக் கோப்பாய்ப் பொலிஸார் அழைத்து வந்த நிலையிலேயே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். (இ-10)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கட்டாயமில்லை-கல்வி அமைச்சு

(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை கட்டாயமில்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் அது தொடர்பான சுற்றுநிருபத்தையும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை இரத்துச் செய்து புதிய கல்வித்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது, பிள்ளைகள் தமது திறமைகளுக்கேற்ப எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவாகும் என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்தார். இந்நிலையில் அதற்கிணங்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா:40<br>உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்:A/L,கிராம அலுவலகர்<br>எதிர்பார்ப்பு:படித்த,உத்தியோகமுள்ள/ உத்தியோகமற்றபெண். உள்நாடு<br>தொ.இ: B/9538 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 15<br>உயரம்: 5’2”<br>தகைமை/தொழில்:CIMA–Part,Ass.Accountant<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,Accontant, உள்நாடு<br>தொ.இ: G/9565 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 15 ¾செவ் 1 இல்<br>உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்:Dip.inElectronic Engineering, Postal Clerk, Canada<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி. உள்நாடு, வெளிநாடு. ஆண் விவாகரத்தானவர்.<br>தொ.இ: B/9539 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்:Bio Medical Science, UK<br>எதிர்பார்ப்புவெளிநாடு மட்டும் (Uk,Canada,Australia)<br>தொ.இ: G/9566 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 86 ¼ செவ் 8 இல்<br>உயரம்: 5’8”<br>தகைமை/தொழில்:BA, MA, M.Phill, Phd Reading, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தொழில் புரியும் பெண். உள்நாடு. ஆண் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/9541 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி1<br>கி.பா: 51<br>தகைமை/தொழில்:BITபட்டதாரி, Software Engineer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/9567 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்:A/L,சுயதொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/9543 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 14 ¾ செவ் 8 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/9571 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பொது வைத்தியசாலையில் தாதியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

## நோயாளர்கள் அசௌகரியம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் தாதிய , வைத்திய சேவை உதவியாளர்கள் மற்றும் குறை நிரப்பு வைத்திய சேவையினரும் இணைந்து நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் 24 மணிநேர இணைந்த பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.





நாடுபூராகவும் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களின் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து இவ் இணைந்த பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடு பட்டுள்ளனர்.

6 வருடங்களாக தர உயர்வுகளை பெறவும் , தாதிய பட்டதாரிகள் சம்பளத்தை உத்தியோக ரீதியான தொழிலுக்குரிய சம்பள அளவுத்திட்டத்தை பெறவும், சம்பள முரண்பாட்டைத் தீர்க்க ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரையினை அமுல்படுத்தவும் , இழந்த பதவி நிலையை மீளப்பெறல் , ரூபா 3000 ஆகவுள்ள விஷேட படியை ரூபா 6000 ஆக உயர்த்துதல் , மேலதிக நேர கொடுப்பனவை 1/80 ஆக பெறவும் , மீதி மேலதிக நேர கொடுப்பனவை பெற்றுக்கொள்ளல், சுகாதார நிர்வாக சேவையினை உருவாக்குதல் ஆகிய கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

இதன் காரணம்ாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் மற்றும் இரத்த சோதனை போன்ற சேவைகளில் தாதிய உத்தியோகத்தர்கள் இன்மையினால் நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்துள்ளதுடன் நோயாளர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு அவசர சிகிச்சை பிரிவில் மாத்திரம் தாதிய உத்தியோகத்தர்கள் பணியை முன்னெடுத்து வருகின்றனர்.(7-250)

# வரட்சியால் பாதிப்பு; குடிநீர் விநியோகம்

வவுனியாவில் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் குடிநீர் வழங்கப்படுகின்றது.

நாட்டில் வரட்சியான கால நிலை நீடித்து வருகிறது. அந்த வகையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட குட்டிநகர், சிறிநகர் ஆகிய கிராமங்களில் 225 குடும்பங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம் மக்களுக்கு நாள் தோறும் நான்காயிரம் லீற்றர் நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இரு கிராமங்களிலும் 4 நீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு அவற்றின் மூலம் நீர் விநியோ கிக்கப்படுவதாக வவுனியா தெற்கு தமிழ்பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.



அத்துடன், வவுனியா வடக்கு பிரதேசத்தில் காஞ்சுரமோட்டைப் பகுதி வரட்சியினால் பாதிக்கப் பட்டுள்ளது. இக் கிராமத்தில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் வரட்சியினால் பாதிக்கப் பட்டுள்ளனர். மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து அவர்களுக்கான குடிநீரை விநியோகித்து வருகின்றது. (7-250)

# சு.கட்சி வேட்பாளரை ஆதரிக்க முடியாது

## றஞ்சித் டி சொய்சா திட்டவட்டம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் முன் நிறுத்தும் ஜனாதிபதி வேட்பாளரை ஏற்கப் போவதில்லை என பொது ஜன பெரமுனவின் உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்துள்ளார். "அடுத்து ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுகின்றமை இன்னும் உறுதியாகவில்லை. எமது கட்சி சுப நேரத்தில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை தீர்மானிக்கும்.

எமது வேட்பாளர் தெரிவாகியிருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அவர்களின் வேட்பாளர் யார் என்பதை கூற முடியாதுள்ளது. மைத்திரிபால சிறிசேனவும் இரண்டாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக எங்கும் கூறவில்லை. எனவே அவர் போட்டியிடமாட்டார் என நான் கருதுகின்றேன்.

52 நாட்கள் அரசியல் குழப்பத்திற்கு மத்தியில் அரசாங்கத்தின் பின்னால் சென்றமை தவறு என ஏற்றுக் கொள்கின்றோம். வரவு-செலவு திட்ட வாக்கெடுப்பின் போது எதிராக வாக்களிக்க நாம் முடிவு செய்தோம். அதனையே செய்து காட்டினோம். இனி மேலும் எவருடைய பேச்சையும் நம்பி ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யப் போவதில்லை. எனவே பொதுஜன பெரமுனவின் மொட்டு சின்னத்தில் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வது உறுதி. இதில் எவருடனும் சமரசம் இருக்கப் போவது இல்லை" என மேலும் தெரிவித்தார். (7)

# அதிக சத்தத்துடனான ஒலியெழுப்பிகளை கட்டுப்படுத்த கடும் சட்டம் அறிமுகம்

(கொழும்பு)

ஒலியை மாசடையச் செய்யும் அதிக சத்தம் எழுப்பும் ஒலியெழுப்பிகளை (Horn) கட்டுப் படுத்த கடும் சட்டங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இதை முன்னிட்டு அதிக ஒலி எழுப்பும் வாகனங்களை சுற்றி வளைக்க பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவினது தலைமையில் அண்மையில் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பான ஆலோச னைகள் வழங்கப்பட்டன.

சூழல் மாசடைதலின் ஒரு அம்சமான ஒலி மாசடைதலை தடுக்கவும் எதிர்காலத்தில் அபிவிருத்தியடைந்த ஒழுக்கமான நாட்டை உருவாக்கவும் எடுக்க வேண்டிய குறுகிய கால நீண்ட கால நடவடிக்கைகள் குறித்தும் இதில் ஆராயப்பட்டன.

இது தவிர நாட்டின் அனைத்து பாடசாலை மாணவர்கள், அனைத்து பயணிகள் மற்றும் சாரதிகளை இணைத்து அமைதியான தினமொன்றை பிரகடனப்படுத்துவது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதில் கலந்து கொண்ட தனியார் பஸ் வண்டி உரிமையாளர் சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பன இச் சட்டத்தை செயற்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு



(மன்னார்)

மன்னார் பரிகாரி கண்டல் அ.த.க. பாடசாலையில் 2018 சாதாரணதரத்தில் ஒன்பது ஏ சித்தி மற்றும் திறமையான பெறுபேறுகள் பெற்று சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் கடந்த வருடம் இடம் பெற்ற சாதாரணதர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவ மாணவிகளுக்கான பரிசில்கள் மற்றும் கௌரவிப்புக்களும் வழங்கப்பட்டன

இந் நிகழ்வில் மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் ஜே.பிரட்லி, நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி , அருட்சகோதரர்கள், பங்குத் தந்தையர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (7-285)


# செயற்றிறன் தேசிய விருது போட்டியில் பளை கமநல சேவை நிலையம் முதலிடம்

(கொழும்பு)

கொழும்பு கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் கமநல சேவை அபிவிருத்தி நிலையங்களுக்கான செயற்றிறன் தேசிய விருது போட்டியில் பளை கமநல சேவை நிலையம் பெற்று அதற்கான விருதை கொழும்பில நடைபெற்ற விழாவில் பெற்றுக் கொண்டது.

இரண்டாமிடத்தை முழங்காவில் கமநல சேவை நிலையமும் மூன்றாமிடத்தை பூநகரி கமநல சேவை நிலையமும் பெற்றுக் கொண்டதோடு அதற்கான விருதையும் பெற்றுக் கொண்டன. (7-84)

# நண்டு பதனிடும் நிலையம் திறப்பு





ILO நிறுவனத்தின் ஏற்பாட்டில் பள்ளிக் குடா கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தால் அமைக்கப்பட்ட நண்டு பதனிடும் நிலைய கட்டடத் திறப்பு விழா கடந்த 5 ஆம் திகதி பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் யோசைப் பிரான்சிஸ் தலைமையில் இடம் பெற்றது. (7-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரில் மூழ்கி இரு சகோதரிகள் பலி!

## கொலை செய்யப்பட்டார்களா என சந்தேகம்

(குருநாகல்)

குருநாகலில் இரு சகோதரிகள் நீரில் மூழ்கி உயிரிழந்தமை அந்தப் பகுதி மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

அளவ்வ பகுதியை சேர்ந்த 14மற்றும்11வயதுடைய இனோகா சச்சினி மற்றும் திரோஷா ஜீமேஷிகா என்ற சிறுமிகளே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வலகும்புர சங்கிலி பாலத்திற்கு அருகிலுள்ள ஏரியில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பொல்கஹவெல வைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த இரு சிறுமிகளும் கொலை செய்யப்பட்டார்களா? அல்லது தற்செயலாக எதுவும் நடந்ததா? என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(இ-7)

## வரலாற்றில் முதற் தடவையாக

# 30 இலட்சம் மெற்றிக்தொன் நெல் இம்முறை அறுவடை

## பிரதமர் ரணில் மகிழ்ச்சி

வரலாற்றில் முதல் தடவையாக இம்முறை 30 இலட்சம் மெற்றிக்தொன் வரை நெல் அறுவடையை உயர்த்த முடிந்துள்ளதாகவும் எதிர்காலத்தில் விவசாயத்தில் அதிக வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் முன்னேற்றுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நீர்ப்பாசன மற்றும் விவசாயத் துறையை முன்னேற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் அநுராதபுரம் ஸ்ரீ மகாபோதியில் இடம்பெற்ற புத்தரிசி பெருவிழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தரிசி விழா 2000 அல்லது 3000 வருடங்களுக்கு மேல் நடத்தப்பட்டு வருகிறது. அது சிங்கள கலாசாரத்தின் ஒரு முக்கியமான அம்சமாகும். இலங்கை மக்கள் பிரதான உணவாக சோற்றைக் கொண்டுள்ளதால்இது வாழ்வாதாரத்தின் முக்கிய அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தை வரி அறவிடும் அரசாங்கமென சிலர் கூறி வருகின்றனர். எனினும் வரலாற்றில் பராக்கிரமபாகு அரசர் உட்பட அரசர்கள் வரிகளை விதித்துள்ளதாக தெரிய வருகிறது. சிங்கள அரசர்கள் காலத்தைப் போன்றே நாட்டில் நெல் உற்பத்தி அதிகரிப்பதற்கு டி. எஸ். சேனநாயக்க பாரிய திட்டங்களை மேற்கொண்டார். அவர் பழைய குளங்கள் பலவற்றை புனரமைத்தார்.

அதேபோன்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவும் மகாவலி திட்டத்தை ஆரம்பித்து விவசாயத்துறைக்கு பெரும் பங்களிப்பை செய்துள்ளார். தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாரிய நீர்ப்பாசனத் திட்டமான மொரகஹகந்த நீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பித்துள்ளார். நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பாக எமது அரசாங்கம் பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளது.

2003 ஆம் ஆண்டு இலங்கையானது அரிசியில் தன்னிறைவு கண்ட நாடாக இருந்துள்ளது. எனினும் அதற்குப் பின்னர் நாட்டில் நிலவிய கடும் வரட்சி காரணமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை இருந்தது.

தற்போது அந்நிலை மாற்றமடைந்து நமக்கு நீர்ப்பாசன வசதிகள் கிடைத்துள்ளன. கடந்த மூன்று வருடங்களாக நாம் வரட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கும் திட்டத்திற்கு முக்கிய கவனம் செலுத்தி னோம். தற்போது வரட்சி குறைந்து காணப்படுகின்றது. மீண்டும் முன்னரைப் போன்று அதிகளவில் விவசாயத்தை மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு





(கொழும்பு)

சம்பளம், பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, தாதியர்கள் நாடளாவிய ரீதியில் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுத் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட குறித்த பணிப்புறக்கணிப்பு இன்று காலை 8 மணி வரை நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தாதியர்கள் மற்றும் துணை மருத்துவர் சேவையாளர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் தங்களால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எதனையும், அரசாங்கம் நிறைவேற்றாமல் காலம் தாழ்த்தி வருகின்றமையை கண்டித்தே இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் தொழிற்சங்கம் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# கேக் உண்ணும் மக்கள் மிகுந்த அவதானம்

இலங்கையில் கேக் உண்ணும் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடும் வெயிலில் படும் வகையில் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் கேக் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெப்பம் படும் வகையில் வைக்கப்படும் கேக்களின் தரம் தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் கேக்கினை குளிர்சாதனப் பெட்டியில் அல்லது குளிரான இடத்தில் வைத்து விற்பனை செய்யுமாறு வர்த்தகர்களிடம் இலங்கைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கேட்டுள்ளது.

அத்துடன், கேக் கொள்வனவு செய்யும் மக்கள் காலாவதியாகும் திகதிக்கு மேலதிகமாக கேக்கின் தரம் தொடர்பில் அதிக அவதானத்தை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# குறை'களை' பதிகம் 38

## வாள்வெட்டும் மின்வெட்டும்

என்னடா வெக்கையிது என்னதான் வாழ்க்கையிது
காலையில் எழுந்தாலே கச கசவென்று வேர்க்கும்
மாலை வருவதற்குள் மயங்கி வீழ்வது போல் பார்க்கும்
என்னடா வெக்கையிது என்னதான் வாழ்க்கையிது

பனையோலை விசிறியெல்லாம் வழக்கொழிந்து போன பின்னர்
பானென்றும் ஏசியென்றும் பாங்காக வாழ்ந்து வந்தோம்
நான்கு மணி மின்வெட்டில் ஐயகோ படுந்துயரம்
மின்வெட்டென்று கதவை திறந்து வைக்க
வாள்வெட்டு நடுங்க வைக்கும்

மண்பானை தண்ணீர் போச்சு மாம்பழத்தின் இனிமை போச்சு
ஆழ்கிணற்று நீரை துலாமிதித்து அள்ளித் தோய்ந்த
காலம் போச்சு
மண்ணாலே வீடுகட்டி ஓலைபோட்டு கூரைசெய்து
சாணத்தால் நிலம் மெழுகி
குப்புறப் படுத்து குளிர்ந்திருந்த தேக சுகம் ஏசியில்
வந்திடுமா

விண் நீரை சேகரிக்கும் குளங்களெல்லாம்
கட்டடங்களாச்சு
பிளாஸ்ரிக்கின் கொடுமையாலே கானெல்லாம்
அடைச்சுப் போச்சு
வீணாப்போன கோபுரங்கள் விண்ணெங்கும் நிறைஞ்சு
போச்சு
அலைவரிசை நூறுக்குள் மூளை குலையும் நிலை
மனிதனுக்கு

காஸ்சிலிண்டர் போத்தல் தண்ணீர் புறோய்லர் கோழி
பிணம் காக்கும் மருந்தடித்த பழவகைகள்
கொத்துரொட்டி
பிரைட் ரைசும் பிரியாணி பரோட்டாவும் நூடில்சும்
பீசாவும்
உள்ளேபோனது வெளியேற வைத்திய செலவும்தான்
தமிழர் வாழ்க்கையிப்போ

வழிப்போக்கர் குளிர்காய மரம் நட்டார் அந்நாளில்
மாட்டுக்கும் தொட்டி கட்டி நீர் வார்த்தார்
முன்னோர்கள்
மின்சார சபையும் தொலைத் தொடர்பு சேவையும்
அழித்த பின்னாலே மரமெங்கே எழிலெங்கே
நிழல்தானெங்கே

ச.நித்தியானந்தன்

அன்பு வாசகர்களே!
இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# பாவனையாளர் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு 80 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய வர்த்தகர்களிடமிருந்து 80 ஆயிரம் ரூபாய் அபராதம் அறவிடப்பட்டதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின்வடமாகாணப்பணிப்பாளர்முகமட் சாவிக் தெரிவித்துள்ளார்.

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினால் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது பாவனையாளர்கள் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கெதிராக யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி ஆகிய நீதவான் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இம் மாதம் 5 ஆம் திகதி மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஐந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 47 ஆயிரம் ரூபாவும் 4 ஆம் திகதி யாழ் நீதவான் நீதிமன்றில் 8 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 30 ஆயிரம் ரூபாவும், 3ஆம் திகதி சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் 1 வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டு அறவிடப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அன்பின் காவியம்" திருக்காட்சி நிகழ்வு







(மன்னார்)

மன்னார்மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் ஏற்பாட்டில் "அன்பின் காவியம்" திருப்பாடுகளின் திருக்காட்சி நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் கலையருவி வளாகத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்விற்கு விருந்தினர்களாக மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவல் பெனாண்டோ ஆண்டகை, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன் றாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் அருட் பணியாளர்கள், அருட்சகோதரிகள், ஆயிரக்கணக் கான மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. (7-285)

# வவுனியா வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் கட்சி உறுப்பினர்களுக்கு பாரபட்சம் காட்டுகிறார்

## த.தே.ம.மு. உறுப்பினர் சஞ்சுதன் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் தமது உறுப்பினர்களின் பிரே ரணைகளை கருத்தில் கொள்ளாதும், தமது வட்டாரப் பகுதிகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை செய்யாது பார பட்சமாகவும், தன்னிச்சையாகவும் செயற்படுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சஞ்சு தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரி வித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபைக் கூட்டத்தில் பேசப்படும் விடயங்கள் முழுமையாக பதிவு செய் யப்படுவதில்லை. கூட்ட அறிக்கைக ளில் சபை அமர்வுகளில் பேசப்பட்ட பல விடயங்களை காண முடிவதில்லை. பேசாத சில விடயங்கள் கூட வந்திருக் கிறது. சில உறுப்பினர்கள் தாம் அவ்வாறு தெரிவிக்கவில்லை என அடுத்த அமர்வுகளில் தெரியப்படுத்துகி ன்ற போது அவற்றை நீக்கி சரி செய்வதாக கூறப்படுகின்றது.

அத்துடன் கிராமங்களில் செய்யப்ப டும் ஒப்பந்த வேலைகளை பொது வான கேள்வி கோரல் ஊடாக செய்யு மாறு பிரேரணை மூலம் கோரியிருந் தேன். எனது பிரேரணை சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நான் அதனை வாக்கெடுப்புக்கு விடுமாறும் கோரியி ருந்தேன். அவர் அதனை அவ்வாறு செய்யவில்லை.

ஆனால் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் ஒதுக்கப்ப டும் வேலைகளை ஒப்பந்தங்கள் மூலம் வழங்க முடியாது எனவும் அதனை தாம் விரும்பியபடியே வழ ங்குவேன் எனவும் தவிசாளர் தெரிவி த்து, அந்த பிரேரணை தொடர்பில் ஒரு வாக்கெடுப்போ அல்லது பிரதிநிதி களின் கருத்துக்களுக்கோ மதிப்பளிக் காது தனிச்சையாக முடிவெடுத்துள்ளார்.

ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்குவதா கவும் அதன் மூலம் எமது வட்டாரங்க ளில் வேலைகளை முன்னெடுக்க லாம் எனவும் கூறப்பட்டது.

அந்தவகையில் அந்த நிதி எங் களது கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக் கப்படவில்லை. இதைக் கேட்டபோது 15 இலட்சம் ரூபாய் தான் இருந்தது. அதனை நாம் கொடுத்து விட்டோம். அடுத்த முறை பார்ப்போம் என எமது கட்சி உறுப்பினர்களை ஓரம்கட்டி செயற்படுகின்றார்.

அத்துடன், கனரக வாகனங்க ளுக்கு பொறுப்பாக ஒரு உத்தியோக த்தர் உள்ள போதும் தலைவர் அவரு க்கும்தெரியாது தன்னிச்சையாக அதனை கையாண்டு வருகின்றார். கனரக வாகனங்களுக்குரிய டீசல் அதற்குரிய உத்தியோகத்தர் ஊடாகத்தான் அடிக் கப்பட வேண்டும். அவ்வாறான நடவடி க்கைகள் நடைபெறவில்லை.

தலைவர் சொல்கின்ற எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் அடிக்கப்ப டுகிறது. அதற்குரிய பணமும் உடனடி யாக எடுக்கப்படுகின்றது. தானாக நினை த்து செய்கின்ற வேலைகளுக்குரிய பணம் சபைக் கணக்கிற்கு வரவில்லை.

இவ்வாறு தான் தலைவருடைய செயற்பாடுகள் நடைபெறுகிறது. இத னால் வவுனியா வடக்கில் யுத்தத்தால் பாதிப்படைந்த உள்ளூர் கிராமங்கள் பல தொடர்ந்தும் பாதிப்பையே எதிர் நோக்க வேண்டிய நிலையில் உள்ளது என மேலும் தெரிவித்தார். (7-250)

# தளபதியின் தாய்க்கு இறுதி அஞ்சலி





(பனிக்கன்குளம்)

அரசியல் வாதிகள் உள்ளிட்ட பெருமளவான மக்களின் அஞ்சலியுடன் விடைபெற்றார் மேஜர் பசீலனின் தாயார். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மூத்த தளபதிக ளில் ஒருவராக இருந்த பசீலனின் தாயாரான நல்லையா தங்கம்மா முள்ளியவளை 03 ஆம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் 05.04.19 அன்று சுகயீனமுற்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரின் இறுதி நிகழ்வுகள் நேற்று முன்தினம் முள்ளி வளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுள்ளது. இந்த வீரத்தாயின் இறுதி நிகழ்வு அரசியல்வாதிகள் மக்களின் இறுதி வணக்கத்துடனும் மலர் வணக்கத்துடனும் அஞ்சலி உரைகள் என்பன இடம்பெற்று முள்ளியவளை கற்பூரப்புல் இந்து மயானத்தில் உடலம் நல்லடக்கம் செய்யப்பட்டது. (7-281)

# தொழில்நுட்ப உலகிற்கு ஏற்றவாறு மழலைகளை தயார்படுத்த வேண்டும்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உப தவிசாளர் தெரிவிப்பு





(கிளிநொச்சி)

நவீன உலகில் அறிவுடைய சமூகத்தினால் தான் நின்று நிலை க்க முடியும். ஆகவே விஞ்ஞான, தொழில்நுட்ப உலகிற்கு ஏற்ற வகையில் எமது மழலைகளை தயார்படுத்த வேண்டிய காலத் தின் கட்டாயத்தை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண் டும் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப தவிசாளர் மு.கஜன் தெரிவித்துள்ளார். பளை தர்மக் கேணி சுகந்தன் முன்பள்ளி மழ லைகளின் "செயற்பட்டு மகிழ்வோம்" எனும் தொனிப்பொருளிலான விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக் கையில், தெய்வத்திற்கு [illegible] இந்த மழலைகள் மகிழ்வா[illegible] லில் கல்வி கற்பதற்கு ஏற்ற வகை யில் எமது சூழல் மாற்றியமைக்க ப்பட வேண்டும் என தெரிவித்தார்.

இந்த விளையாட்டு நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை யின் உறுப்பினர், பாடசாலை ஆசி ரியர்கள், விளையாட்டு கழகத்தலை வர், முன்பள்ளி ஆசிரியர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் [illegible] கலந்து கொண்டனர். (7)

# பூந்துணர் நறவம் IX சஞ்சிகைக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

பூநகரி கலாசாரப் பேரவையால் வருடம் தோறும் வெளியிடப்படும் பூந்துணர் நறவம் IX சஞ்சிகைக்கான ஆக்கங்கங்கள் கோரப்பட் டுள்ளன. ஆக்கங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக தலைவர் கலாசாரப்பேரவை, பிரதேச செயலகம், பூநகரி எனவும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

ஆக்கங்கள், கட்டுரை 500 சொற்களுக்கு மேற்படாமல், கவிதை 40 வரிகளுக்கு மேற்படாமல், சிறுகதை 500 சொற்களுக்கு மேற்படாமல், நாடகம் 4 காட்சிகளுக்கு மேற்படாமல் மலர் வெளியீட்டுக் குழுவினால் முன்னு ரிமைப்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்படும் ஆக்கங்களே மலரில் பிரசுரிக் கப்படுமெனவும் பூநகரி பிரதேச கலாசார விழாவில் பூந்துணர் IX சஞ்சிகை வெளியிடப்படுமெனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (7-84)




வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் அக்கராயன்குளம் கிராமத் தின் முதியோர்கள் திருகோணமலை மாவட்டத்தின் திருத் தலங்களுக்கு ஆன்மீகப் பயணமாக அண்மையில் அழைத்துச் செல்லப்பட்டனர். (7-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புருசோத்தமன் எழுதும்

# கம்பவாரிதிக்கு ஓர் அன்பு மடல்




அன்புக்குரிய கம்பவாரிதி அவர்களுக்கு வணக்கம். பொதுவில் ஒரு மகோற்சவம் என்றால், அது குறைந்தது பத்து நாள் திருவிழாவைக் கொண்டிருக்கும்.

நித்திய பூசையில் ஏற்பட்ட குறை குற்றங்களை நிவர்த்திக்கும் வகையில் மகோற்சவம் இடம்பெறுவது வழமை.

அந்தவகையில் நாமும் தங்களுக்கு எழுதிய கடிதங்களின் தொடர் பத்து என்ற எண்ணிக்கைக்கு வந்துவிட்டது. தங்களுக்கான கடிதத்தின் பத்துத் தொடர்களும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய அரசியல் குறைபாடுகளையும் குற்றங்களையும் களைவதற்கானது.

ஆலயத்தின் நித்திய பூசையில் ஏற்படுகின்ற குற்றங்களை நிவர்த்திப்பதற்காக பத்து நாள் மகோற்சவம் செய்யப்படுவது போல,எங்கள் அரசியலில் உள்ள பெருங் குறைகளையும் குற்றங்களையும் நிவர்த்திக்கவேண்டி பத்துத் தொடர்கள் கொண்ட இக் கடிதத்தை தங்களுக்கு எழுதியுள்ளோம்.

இக்கடிதத்தை எழுதுகின்ற நோக்கம் எம் இனம் சார்ந்தது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அதனை மீளவும் வலியுறுத்த விரும்புகின் றோம்.

எதுவாயினும் நித்திய பூசையில் நிகழ்ந்த குறை குற்றங்களை நிவர்த்திப்பதற்காக மகோற்சவம் ஏற்படுத்தப்பட்டாலும் அதனைச் செய்கின்ற மிகப்பெரும் பொறுப்பு மகோற்சவத்தின் பிரதம குருவைச் சார்ந்ததாகும். பிரதம குரு பிழைவிட்டால் மகோற்சவம் அர்த்தமற்றதாகிவிடும்.

ஆகவே, ஒரு ஆலயத்தின் மகோற்சவத்தில் பிரதம குரு எந்தளவுக்கு முதன்மையும் முக் கியமும் பெறுகின்றாரோ அது போலத்தான் அரசியலில் ஏற் பட்டுள்ள மிக மோசமான குற்றங்கள், குறைகள், ஊழல்கள் என்பன நிவர்த்திக்கப்பட வேண்டுமாயின் அதற்குச் சரியான, நேர்மையான, பக்கச்சார்பற்ற, சுயநலன் கருதாத, ஆத்மபலம் கொண்ட ஒருவரை தலைமைக் குருவாக நியமித்தால் மட்டுமே எங்கள் அரசியலில் இருக்கக்கூடிய துஷ்ட நிக்கிரகத்தை பரிபாலனம் செய்ய முடியும்.

அந்தவகையில் ஒட்டு மொத்தத் தமிழ் மக்களினதும் நம்பிக்கைக்குரிய தலைவராக விளங்குகின்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் தமிழ்ப்பற்று மிக்க, தமிழர்களுக்காக நேர்மை யுடன் பணியாற்றி வருகின்ற தமிழ் அரசியல் வாதிகளை ஒற்றுமைப்படுத்தி ஓரணியில், எம் தமிழினத்தின் உரிமைக்காக புதிய பாதையில் பயணிக்க வேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

மரியாதைக்குரிய கம்பவாரிதி அவர்களே! நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் கம்பன் கழகத்தில் சுமார் 15 ஆண்டுகள் பெருந்தலைவராக இருந்தவர். எனவே அவரின் நியாயத்துவம் தாங்கள் அறியாததல்ல. இருந்தும் தங்களுக்கும் அவருக்குமிடையில் சில கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆயினும் அந்தக் கருத்து முரண்பாடு விற்பிடித்து நீர் கிழிய எய்த வடுப்போல ஒரு கணப்பொழுதில் தீர்ந்து போக வேண்டியது.

தவிர, தனிப்பட்ட கருத்து முரண்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய கால சூழ்நிலையில் நம் இனம் இப்போது இல்லை என்பதனால் எம் இனம் சார்ந்து சிந்திப்பது மிகமிக அவசியமானதாகும்.

போர்க்குற்ற விசாரணை இல்லை, காணாமல் போனவர்களைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை, தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை இல்லை. உங்கள் அப்பா உங்களோடு வந்துவிடுவார் நம்பிப்போங்கள் என்று ஆனந்தசுதாகரனின் சின்னம் சிறு பிள்ளைகளுக்கு ஜனாதிபதி அளித்த உத்தரவாதம் கூட இன்னமும் அமுலாகவில்லை.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை. படையினர் அபகரித்துள்ள காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்ற நிலையில் தமிழ்மக்களுக்கு எதுவுமே நடந்தாகவில்லை.

நிலைமை இதுவாக இருந்த போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைக் காப்பாற்றுவதிலேயே இலங்கைத் தமிழரசுக் கட்சி மிகத் தீவிரம் காட்டுகிறது.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அரங்கேற்றுவதற்காக தமிழரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி அரசை ஆதரிக்கிறது என்றால், புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தமும் அரங்கேறப் போவதில்லை என்பது நிரூபணமாயிற்று. அப்படியாயின் பிரதமர் ரணிலின் அரசை ஆதரிப்பது எதற்கானது என்பது தான் . புரியாமல் உள்ளது.

எங்கும் ஏமாற்றம், எதிலும் ஏமாற்றம் என்பதோடு யுத்த இழப்புக்கள் தந்த வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கும் எங்கள் தமிழினம் வாழவேண்டுமாயின் முதலில் எம் அரசியலில் மாற்றமும் மறுமலர்ச்சியும் ஏற்படவேண்டும்.

இதை ஏற்படுத்தக் கூடிய சொல்லாண்மையும் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக நியாயத்தை தக்கவாறு உரைக்கவல்ல பெருந்தகைமையும் துறவு நிலைத் துணிவும் தங்களிடமே உண்டு.

எனவே கம்பன் கழகம் அமைத்து கன்னித் தமிழ் வளர்க்கும் தாங்கள், தமிழினத்திற்கு சரியான அரசியல் தலைமை தேவை என்பதை தமிழ்மக்களுக்கு எடுத்துரைக்கின்ற பெரும் பணியை அறப் பணி யாகச் செய்யவேண்டும் என்பது தான் நம் தாழ்மையான கோரிக்கை.

இங்கு தமிழரசுக் கட்சியிலும் ஆற்றல்மிகு அரசியல் வாதிகள் உளர். அவர்களையும் இணைத்துத் தமிழ்மக்களுக்கான புதிய அரசியலை நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் உருவாக்குவோம்.

இங்கு எந்த அரசியல்வாதிகள் மீதும் எமக்கு எந்தக் காழ்ப்புணர்வும் கிடையாது என்பதைச் சத்தியப்படுத்துகின்றோம்.



எனவே மீண்டும் தங்களிடம் கேட்டுக்கொள்வது பொய்மையாளர்களை விடுத்து மெய்மையாளர்களை ஒன்று படுத்தி, ஒற்றுமைப்படுத்தி தர்மத்தின் வழியில் தமிழ் மக்களுக்கான அரசியலை அமைப்போம்.

அது நிச்சயம் இறைபலத்துடன் எம் இனத்திற்கு விடிவைத் தரும். இது சத்தியம்.

நன்றி

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்

## பா.ஜ.க.தேர்தல் அறிக்கை



(டில்லி)

விவசாயிகளுக்கு ஓய்வூதியம், வட்டியில்லாக் கடன், ராமர் கோயில், 33வீத இட ஒதுக்கீடு உள்ளிட்ட அம்சங்கள் அடங்கிய பாஜக தேர்தல் அறிக்கையை வெளியிட்டார் அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் ராஜ்நாத் சிங்.

பிரதமர் மோடி, பாஜக தலைவர் அமித் ஷா, உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் பாஜக தேர்தல் அறிக்கை நேற்று டில்லியில் வெளியிடப்பட்டது. அப்போது அருண் ஜேட்லி, சுஷ்மா சுவராஜ் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் உடன் இருந்தனர். மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். தேர்தல் வாக்குறுதியில் 75 அம்சங்கள் உள்ளதாகவும் அவை அனைத்தும் 2022-க்குள் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- 5 ஆண்டுகளுக்கு ரூ.1 லட்சம் வரையிலான விவசாய கடனுக்கு வட்டி கிடையாது.
- 60 வயதான சிறு, குறு விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்
- 2022-ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடு கட்டித் தரப்படும்
- கிராமப்புற வளர்ச்சிக்காக ரூ.25 லட்சம் கோடி ஒதுக்கப்படும்
- ஜிஎஸ்டி நடைமுறைகள் எளிமையாக்கப்படும்
- முத்தலாக் தடை சட்டம் நிறைவேற்றப்படும்
- ராமர் கோயில் கண்டிப்பாக கட்டப்படும் போன்றவைகளாகும். (7)

# ஐ.எஸ். தலைவன் சுட்டுக்கொலை

(பக்தாத்)

ஈராக்கில் ராணுவத்தின் அதிரடி தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாத ,இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சுலைமான் அகமது முகைதின் என்பவரை ராணுவ வீரர்கள் சுட்டுக்கொன்றனர்.

சிரியாவை புகலிடமாக கொண்ட ஐ.எஸ். பயங்கரவாதிகள் அயல் நாடான ஈராக்கிலும் காலூன்றி, அந்நாட்டின் பல்வேறு நகரங்களை தங்கள் வசமாக்கினர். இதையடுத்து, அமெரிக்க கூட்டுப்படைகளின் உதவியோடு ஈராக் இராணுவம் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான போரை முன்னெடுத்தது. இதில் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் பெரும் பின்னடைவை சந்தித்தது.

கடந்த 2017-ம் ஆண்டு ஐ.எஸ். பயங்கரவாதிகள் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக ஈராக் அரசு அறிவித்தது. எனினும் குறுகிய காலத்திலேயே ஐ.எஸ். பயங்கரவாதிகள் அங்கு மீண்டும் காலூன்ற தொடங்கி விட்டனர்.

நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள பாலைவன பகுதியான அன்பர் மாகாணத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஆதிக்கம் மிகுந்து காணப்படுகிறது. அவர்களை ஒடுக்க ஈராக் இராணுவம் தொடர்ந்து போராடி வருகிறது.

இந்த நிலையில், அன்பர் மாகாணத்தின் தலைநகர் ரமாடியில் உள்ள அல்-ரசாசா என்ற இடத்தில் ர்ாணுவவீரர்கள் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கி இருந்த ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சுலைமான் அகமது முகைதின் என்பவரை ராணுவவீரர்கள் சுட்டுக்கொன்றனர். (7)

# லிபிய மக்களை கைவிட மாட்டோம்

## ஐ.நா.செயலாளர் நாயகம் தெரிவிப்பு

(டிரிபோலி)

லிபியாவில் உள்நாட்டு போர் இடம்பெற்று வருகின்ற நிலையில், அந்நாட்டு மக்களை ஒரு போதும் கைவிட மாட்டோம் என ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரேரஸ் தெரிவித்துள்ளார்.

ஜோர்தானிலுள்ள பலஸ்தீனியர்களின் அகதி முகாமொன்றில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

லிபிய தேசிய மாநாட்டை நடத்தும் முனைப்பில் ஐ.நா. ஈடுபட்டுள்ள நிலையில, அரசுக்கு எதிராக போராடிவரும் புரட்சிகர லிபிய இராணுவத்தின் தளபதி காலிஃபா ஹிப்தரின் படைகள் தலைநகரில் சண்டையிட்டு வருகின்ற நிலையில் அவர் இதனை கூறியுள்ளார்.

காலிஃபா ஹிப்தரின் இராணுவ நடவடிக்கையை பலரும் விமர்சித்து வருவதோடு, அதனை முறியடிக்கும் முயற்சியில் லிபிய அரச படைகள் நாலாபுறமும் தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் வீட்டிற்கு அருகில் குண்டுகள் மீட்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் வீட்டிற்கு அருகில் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் புறநகரில் பிரதமர் இம்ரான்கானின் 'பான்காலா' என்ற அவரது வீடு உள்ளது. பிரதமராவதற்கு முன்பு அந்த வீட்டில் தான் அவர் தங்கியிருந்தார்.

இந்த நிலையில் அவரது வீட்டிற்கு அருகே அரை கிலோ மீற்றர் தூரத்தில் 18 துப்பாக்கி குண்டுகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து பயங்கரவாத எதிர்ப்பு படை, குற்றப்புலனாய்வு பிரிவு, வெடிகுண்டு செயல் இழப்பு பிரிவு என பல்வேறு பிரிவு பொலிஸார் வருகை தந்தனர்.

இதன்போது குறித்து குண்டுகள் சோதனை செய்யப்பட்டன. அவை விமானங்களை சுட்டு வீழ்த்தி அழிக்கக்கூடிய துப்பாக்கி குண்டுகள் என தெரிய வந்தது. (7)

# லிபியாவில் 21 பேர் உ

(டிரிபோலி)

லிபியாவில் அரச எதிர்ப்பு படைகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் தாக்குதலில் 21 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தலைநகர் டிரிபோலியில் முன்னெடுக்கப்பட்டுவரும் இத்தாக்குதலில், 27 பேர் காயமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

ஜெனரல் காலிஃபா ஹஃப்தரின் அரச எதிர்ப்பு படைகள், தலைநகர் டிரிபோலியை கைப்பற்றும் முனைப்பில் கடந்த சில நாட்களாக போரிட்டு வருகின்றன. இந்நிலையில், அரச படைகள் எதிர்த்தாக்குதலை நடத்த, உள்நாட்டு போர் உக்கிரமடைந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.


இச்சண்டையில் தமது தரப்பில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஹஃப்தரின் தரப்பு தெரிவிக்கின்றது.

அங்கிருந்த மக்களை பாதுகாப்பாக

# 8 இலட்சம் பேரை இன 25 ஆம் ஆண்டு நினை







# பாடசாலை அ குழந்தைகள்

(சனா)

ஏமனிலுள்ள பெண்கள் பாடசாலை அருகே இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 7 சிறுவர்கள் உள்ளிட்ட 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற இந்த குண்டுவெடிப்பில் 110 பேர் வரை காயமடைந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

தலைநகர் சனாவின் அருகிலுள்ள கிடங்கிலிருந்து இந்த குண்டு வெடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல் தாக்குதல் உயிரிழப்பு!



வெளியேற்றும் முனைப்பில், இரண்டு மணித்தியால யுத்த நிறுத்தத்தை ஐ.நா. கோரியிருந்தது. எனினும், தொடர்ச்சியாக தாக்குதல் இடம்பெற்று வருகின்றது.

இருதரப்பும்போரை நிறுத்தி உடன்பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டுமென அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோ வலியுறுத்தியுள்ளார். லிபியாவின் எதிர்காலத்திற்கு அதுவே உகந்ததென அவர் அறிக்கையொன்றை வெளியிட்டு வலியுறுத்தியுள்ளார். (7)

# னப்படுகொலை செய்த னவு தினம் அனுஷ்டிப்பு



(ருவாண்டா)

இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு இனமே கொன்றொழிக்கப்பட்ட ருவாண்டா இனப்படுகொலையில் 25ஆம் ஆண்டு நினைவுதினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1994ஆம் ஆண்டு 100 நாட்களில் 800,000 துஸ்தி இனத்தவர்கள், ஹூட்டு இனத்தவர்களால் படுகொலை செய்யப்பட்டனர். உலக வரலாற்றில் கறைபடிந்த சம்பவமாக பதிவாகியுள்ள இக்கோரச் சம்பவத்தின் 25ஆவது ஆண்டு நினைவுதினம் ருவாண்டா ஜனாதிபதி போல் ககமே தலைமையில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

ஏறத்தாழ 250,000 பேர் புதைக்கப்பட்டுள்ள கிசோஸி நினைவிடத்தில் இடம்பெற்ற நினைவஞ்சலி நிகழ்வில், பிரமுகர்கள் இணைந்து பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். அத்தோடு, ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (7)

# எம் நாட்டைப் பாதுகாக்கும் படையை பயங்கரவாதிகளென அறிவித்தால் அமெரிக்க இராணுவத்தினரை பயங்கரவாதிகளாக அறிவிப்போம்




(டெஹ்ரான்)

இஸ்லாமிய புரட்சிகர இராணுவப் படையை பயங்கரவாதிகள் என அமெரிக்கா அறிவித்தால் பதிலடியாக அமெரிக்க இராணுவத்தை பயங்கரவாத அமைப்பாக நாங்களும் அறிவிப்போம் என ஈரான் எச்சரித்துள்ளது.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொண்ட அமெரிக்கா, அடுத்தடுத்து ஈரான் அரசின்மீது பல்வேறு பொருளாதார தடைகளை விதித்து வருகிறது. தனது நேச நாடுகளும் ஈரானை புறக்கணிக்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறையின் சார்பில் நிர்ப்பந்திக்கப்படுகிறது.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் முடிவால் உலகளாவிய அளவில் தங்கள் நாட்டின் மீதான நன்மதிப்பு பாதிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஹஸன் ரவுகானி தெரிவித்தார்.

அமைதியான முறையில் ஆக்கபூர்வமான தேவைகளுக்கு யுரேனியத்தை செறிவூட்டும் உரிமை ஈரானுக்கு உள்ளதாகவும் தெரிவித்த ரவுகானி, அமெரிக்காவின் அழுத்தத்துக்கு ஒருபோதும் அடிபணிய மாட்டோம்.

எங்கள் நாட்டின் சுதந்திரத்தையும், இஸ்லாமிய நன்முறைகளையும் பாதுகாக்க ஒருநாளும் தவறமாட்டோம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

சில இடங்களில் ஈரான் அரசு ரகசியமாக அணு உலைகளை அமைத்து வருவதாக அமெரிக்க உளவுத்துறை குற்றம்சாட்டி வருகிறது.

இதற்கிடையில், ஈரான் நாட்டை பாதுகாக்கும் இஸ்லாமிய புரட்சிகர ராணுவப் படையை பயங்கரவாத இயக்கமாக அறிவிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளதாக அண்மையில் சில மேற்கத்தேய ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், நாங்களும் அமெரிக்க ராணுவத்தை பயங்கரவாத அமைப்பாக அறிவிப்போம் என ஈரான் எச்சரித்துள்ளது. (7)

# பாக். சிறையிலிருந்து நல்லெண்ண அடிப்படையில் முதல் கட்டமாக 100 இந்தியர்கள் விடுவிப்பு

(இஸ்லாமாபாத்)

நல்லெண்ணத்தின் அடிப்படையில் 360 இந்திய கைதிகளை விடுதலை செய்வதாக பாகிஸ்தான் அரசு அறிவித்ததில் முதல்கட்டமாக நேற்று 100 பேர் விடுதலையாகினர்.

அரபிக்கடலுக்குள் எல்லை தாண்டி மீன்பிடிக்க செல்லும் இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு, அவர்கள் அங்குள்ள சிறைகளில் அடைக்கப்பட்டு வருகின்றனர்.

இரு நாட்டு தூதரகங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி நல்லெண்ண அடிப்படையில் மீனவர்கள் விடுதலை செய்யப்படுவது வழக்கம்.



இந்நிலையில், பாகிஸ்தான் சிறைகளில் உள்ள 360 இந்திய மீனவர்கள் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட உள்ளனர் என அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் முஹம்மது பைசல் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தார்.

ஏப்ரல் 8 ஆம் திகதி 100 கைதிகளும், 15 ஆம் திகதி 100 கைதிகளும், 22 ஆம் திகதி 100 கைதிகளும், 29 ஆம் திகதி 60 கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டிருந்தார். இவர்களில் 355 மீனவர்கள் மீதி 5 பேர் தவறுதனாக இந்திய எல்லையை கடந்து சென்று பிடிப்பட்டவர்கள் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், முதல்கட்டமாக கராச்சி சிறையில் இருந்து நேற்று 100 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (7)

# அருகே குண்டு வெடிப்பு! ள் உட்பட 13 பேர் பலி!

துள்ளது. இதில் பெண்கள் பாடசாலையொன்று முற்றாக சேதமடைந்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டிலிருந்து தலைநகர் சனா, ஹவுதி கிளர்ச்சியாளர்களின் வசமுள்ளது. இதனால் அப்பகுதி அரச படைகளால் மூடப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இக்குண்



டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

ஏமனில் சவுதி தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தி வருகின்ற போதும், இக்குண்டுவெடிப்புக்கு இன்னும் உரிமைகோரவில்லை.

இதேவேளை, கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களை தேக்கி வைத்த கிடங்கிலிருந்தே மேற்படி குண்டு வெடித்ததாக ஏமன் அரச செய்திச் சேவையொன்று குறிப்பிட்டுள்ளது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும் இருவர் நேற்று அதிகாலை நாடுகடத்தல்

# அரசியல்வாதிகளின் விபரங்கள் அம்பலம்!

### சூடுபிடிக்கும் போதைப்பொருள் விவகாரம்



(கொழும்பு)

மாகந்துரே மதூஷ்டன் தொடர்பு வைத்துள்ள இலங்கை அரசியல்வாதிகள், பொலிஸ் உயரதிகாரிகள் பலரின் பெயர் விபரங்கள் அடங்கிய தகவல்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையிலுள்ள கஞ்சிபான இம்ரானிடம் நடத்தப்பட்ட விசாரணைகளிலிருந்து வெளிவந்துள்ளது.

இதேவேளை மாகந்துரே மதூஷ்டன் கடந்த பெப்ரவரி மாதம் டுபாயில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் மேலும் இருவர் நாடுகடத்தப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை 5.10 மணிக்கு UL-226 எனும் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் இருவரும் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் கட்டுநாயக்க விமான நிலைய பிரிவு அதிகாரிகளின் (CID) கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக மாகந்துரே மதூஷ்க்கு இலங்கையிலுள்ள அரசியல்வாதிகளுடனான தொடர்புகள் பலவும் வெளிவந்துள்ளன. இதற்கிணங்க மதூஷ்க்கு இலங்கையிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் பல தொடர்பாகவும் தகவல்கள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன. அந்த வர்த்தக நிறுவனங்களுள் தெற்கிலுள்ள உல்லாச பிரயாண ஹோட்டலொன்றும் உள்ளடங்குகின்றது. அந்த ஹோட்டலை வேறொரு நபரின் பெயரில் மதூஷ் நடத்திச் செல்வதும் மற்றும் வாகனங்களை வாடகைக்கு விடும் நிறுவனம் ஒன்றையும் மதூஷ் ஆரம்பித்துள்ளதாகவும் கஞ்சிபான இம்ரான் தகவல் வெளியிட்டுள்ளார்.

மதூஷ்க்கு சொந்தமான காணிகள் பல நாடெங்கிலும் பல்வேறு பிரதேசங்களில் உள்ளதாகவும் காணிகளை விற்பதற்கான வர்த்தகமொன்றும் மதூஷினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மதூஷ்க்கு மாத்திரமன்றி கஞ்சிப்பான இம்ரானுக்கும் கொழும்பு நகரில் சொத்துக்கள் உள்ளதாகவும் தகவல்களிலிருந்து தெரியவருகிறது.

கஞ்சிபான இம்ரான் அரசியல்வாதிகள், பொலிஸ் உயரதிகாரிகள் பலரின் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. அந்த உயரதிகாரிகளின் ஓய்வுபெற்றுள்ள இரண்டு அதிகாரிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கஞ்சிபான இம்ரான் டுபாயிலிருந்த போது கொழும்பு பொலிஸ் நிலையங்கள் பலவற்றிலும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரிகள் பலருடனும் தொலைபேசி மூலம் கலந்துரையாடியுள்ளதாகவும் அவ்வேளையில் மரண அச்சுறுத்தல் விடுத்ததாகவும் கஞ்சிபான இம்ரானிடம் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

2015ஆம் ஆண்டு மாகந்துரே மதூஷ் டுபாய்க்கு அழைத்துச் சென்றதில் தமக்கு பங்களிப்புள்ளதாகவும் அங்கு முதலீட்டு விசாவை தயாரித்து வழங்கியதும் தாமே என்றும் கஞ்சிபான இம்ரான் விசாரணைகளின் போது தகவல்களை வெளியிட்டுள்ளார்.

மாகந்துரே மதூஷ் தொடர்பில் இலங்கையிலுள்ள ஊடகங்கள் வெளியிடும் தகவல்களை தானே அங்கு தெரிவித்ததாகவும் தாம் அதிக குற்றச் செயல்களை செய்வதற்கு அவரே தம்மைத் தூண்டியதாகவும் கஞ்சிபான இம்ரான் தெரிவித்தார்.

மாகந்துரே மதூஷ் தனது மகளின் பிறந்தநாளை பெரிய அளவில் கொண்டாடுவதற்கு தீர்மானித்து இலங்கையிலுள்ள அவரது சகாக்களை அதில் கலந்துகொள்ளச் செய்வதற்கும் தீர்மானித்தமையானது அவரது பலத்தைக் காண்பிப்பதற்காகவே என்றும் கஞ்சிபான இம்ரான் விசாரணைகளின் போது தெரிவித்திருந்தார்.

மதூஷ் போதைப்பொருள் விருந்துபசாரமொன்றை ஏற்பாடு செய்கையில் தாம் அதைத் தடுத்ததாகவும் அதிக பிரச்சினைகள் உள்ளதால் நாம் அவ்வாறு செய்யக்கூடாது என்று கூறியதாகவும் அவர் அதனை செவிமடுக்க மறுத்துவிட்டதாகவும் விருந்துபசாரத்தை நடத்தினார் என்றும் கஞ்சிபான இம்ரான் தெரிவித்தார்.

அந்த விருந்துபசாரத்திற்கு கஞ்சிபான இம்ரான் கடைசி நேரத்திலேயே சென்றதாகவும் தானும் தனது மனைவி, பிள்ளைகள் அந்த விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளப் போவதில்லையென்று தீர்மானித்திருந்த போது மதூஷ் அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு நச்சரித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# அம்பாந்தோட்டையின் பாதுகாப்பு சீனாவிடம் வழங்கப்படாது-ரணில்

(கொழும்பு)

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பு மற்றும் செயற்பாடுகள் எந்தவொரு நாட்டுக்கும் வழங்கப்படாது. அதனை இலங்கையே கையாளும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில், கடந்த சனிக்கிழமை நடந்த ஆசிய - ஐரோப்பிய அரசியல் மன்றத்தின் மூன்றாவது கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“அம்பாந்தோட்டை துறைமுகத்தை பலரும் சீன இராணுவத் தளமாக கருதிக் கொண்டிருக்கின்றனர்.

அங்கு ஒரு இராணுவ தளம் அமைக்கப்படவுள்ளது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அது இலங்கை கடற்படையின் தளமாகும்.

அந்த தளத்தை கடற்படையின் றியர் அட்மிரல் ஒருவர் கட்டுப்படுத்துவார்.

எந்த நாட்டில் இருந்தும், எந்தக் கப்பலும், அங்கு வர முடியும். ஆனால் துறைமுகத்தின் செயற்பாடுகளை நாங்கள் தான் கட்டுப்படுத்துவோம்.

தற்போதைய அனைத்துலக போக்குகளைப் புரிந்து கொண்டு, எல்லா நாடுகளுடனும் கொழும்பு நட்புரீதியான, சுமுகமான உறவுகளை பேணுகிறது.

எமது வரலாற்றில் இந்தியா எமது பங்காளராக இருந்து வருகிறது. அமெரிக்காவின் எதிர்ப்பு இருந்தாலும், சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் நாங்கள் ஜப்பானுடன் இணைந்தோம்.



மக்கள் சீன குடியரசை அங்கீகரித்து அதனுடன் முதலாவது வணிக உடன்பாட்டை இலங்கை செய்து கொண்டது.

இந்த நிலைமையை நாங்கள் தொடருவோம். யாருடைய போட்டியிலும் நாங்கள் சிக்கிக் கொள்ளமாட்டோம்." என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புளியின் மகத்துவம்

அந்த ஆளைக் கண்டாலே போதும் எனக்கு வயிற்றில் புளியைக் கரைத்த மாதிரி ஆகிடும் எனச் சொல்வது உண்டு.

இதோ இருக்கிறார் இவர் வந்து அந்த் செய்தியை சொன்னதற்குப் பிறகுதான் என் வயிற்றில் பாலைவார்த்தது மாதிரி இருக்கு! இப்படிச் சொல்வதும் உண்டு.

வாளியில் புளியைக் கரைக்கிறது சரி! வயிற்றிலே புளியைக் கரைப்பது என்றால் அது எப்படி?

ரொம்ப பயமறுத்திவிட்டார் எனச் சொல்வதற்குப் பதிலாக இப்படி சொல்லுவார்கள். அது சரி...

புளி என்ன அவ்வளவு மோசமான ஒன்றா? சில பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் புளி ஏதோ ருசிக்காகத்தான் உணவில் சேர்க்கிறோம் வேறு எந்த பிரயோசனமும் இல்லை என்று! அது தப்பு.

அதற்காகத்தான் இன்று இந்த தகவல் நேரத்தை புளிக்காக ஒதுக்கலாம் என ஒரு யோசனை. 100 கிராம் புளியில் பல்ப் (pulp) 283 கலோரி சத்து இருப்பதாக நிபுணர்கள் சொல்கிறார்கள். அப்படி இருக்கும் போது அதைப்பற்றி பேசாமல் இருந்துவிட முடியுமா?

புளியமரத்திற்குப் பூர்வீகம் ஆபிரிக்காவாக இருந்தாலும் இப்ப நம்ம ஊரில் அது தாராளமாக குடியிருக்கிறதே! சிலர் மருந்து சாப்பிடும் போது புளி சேர்க்கக் கூடாது என பத்தியம் சொல்லுவது உண்டு. ஆனால் புளியே ஒரு நல்ல மருந்து தான் சேர்! தாகத்தை தணிக்க, பசியைத் தீர்க்க, வீக்கத்தைக் குறைக்க இப்படி எல்லாவற்றிற்கும் இதை உபயோகப்படுத்தலாம். சுத்தமான தண்ணீரில் கொஞ்சம் புளியைக் கரைத்து (Dilute Tamarind Juice) அதில் ஒரு ஆறு கரண்டி சாப்பிடுங்கள்! இது பசியை அதிகப்படுத்தும். உடம்பில் எங்கேயாவது வீக்கம், வலி இருக்கா? புளி சாறு, உப்பு இது இரண்டையும் கலந்து தேய்த்து விடுங்கள் (massage) தினம் இரண்டு தடவை இப்படிச் செய்தால் போதும் வெறும் புளியம் பழத்தை சாப்பிட்டாலே ஈறுகளில் இரத்தம் வருவது நின்று போய்விடும்.

சாப்பிட்ட பின் ஒரு மணி நேரம் கழித்து நல்லா பழுத்த புளி ஒன்றைச் சாப்பிடுங்கள். அது நல்ல (Laxative)

ஜீரணக் கோளாறா? பசியின்மையா? அதுக்கும் ஒரு புளி வைத்தியம் இருக்கு என்ன தெரியுமா? நல்லா கொதித்து ஆறிய பாலை எடுத்து அதில் ஒரு 4 அல்லது 5 சொட்டு புளி சாறு விட வேண்டும். என்ன ஆகும் தெரியுமா? பால் பிரிந்து அடியில் தங்கிவிடும்! மேலே தண்ணீரா ஒரு திரவம் நிற்கும் அதை எடுத்து தினமும் மூன்று வேளை சாப்பிட வேண்டும்.

இது வெறும் தண்ணீரில்லை பாலில் இருக்கின்ற அத்தனை புரோட்டீனும் இந்த திரவத்திலே இருக்கும். அதே நேரத்தில் இது சுலபமாக சமிபாடடையும், Very light food இது.

தென்னிந்தியாவில் இருக்கிறவர்களுக்கு மாரடைப்பு வருகின்றது, சிறுநீரக கோளாறுகள்,- Kidney Stone இது எல்லாம் குறைவு என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். ஏன்?

சாம்பார், ரசத்தில் புளியை தொடர்ந்து உபயோகப்படுத்துகின்றோம் அதனால் தான்!

புளி விதைகளை தூள் பண்ணி வைத்திருக்கலாம்; அதிலும் நிறைய மருத்துவ குணம் இருக்கு. இந்தத் தூளில் ஒரு மேசைக் கரண்டி எடுத்து தண்ணீரில் கலந்து தினம் மூன்று வேளை சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு நிற்கும்.

1/2 மேசைக் கரண்டி இந்தத் தூள், சம அளவு தேன் இது இரண்டையும் கலந்து தினம் இரண்டு வேளை சாப்பிட்டால் இரத்தப் போக்கை நிறுத்திவிடும்.

ஒரு மேசைக் கரண்டி இந்தப் பவுடர் , தண்ணீர் ருசிக்காக கொஞ்சம் சர்க்கரை இதை கலந்து தினம் ஒரு வேளை இரவு சாப்பாட்டிற்கு முன்னாடி சாப்பிட வேண்டும் இரண்டு வாரத்திற்கு சாப்பிடலாம். இது சக்தி விரயத்தைத் தடுத்துவிடும்.

புளியங் கொழுந்தை கறி செய்யலாம். அதிலே விற்றமின் ஏ, சி பின்பு இரும்புச் சத்து எல்லாம் இருக்கின்றது! புளிய மரப் பட்டையை சுட்டுக் கரியாக்கி அதை தூள் செய்து எண்ணெயில் குழைத்து தீப் புண்ணுக்கு தடவலாம்.

விடம் குடித்துவிட்டால்– அடர்த்தியான புளிச்சாறு திரும்பத் திரும்பக் கொடுத்து வாந்தி எடுக்க வைத்துவிடலாம்.

10 மில்லி தண்ணியில் 6 கிராம் பழுத்த புளியை இரண்டு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். இதை எடுத்து 4 மணி நேரத்திற்கு ஒரு தடவை கொடுத்தால் வாந்தியை நிறுத்திவிடும். ஆனால் ஒன்று இந்தக் கரைசலை ஒவ்வொரு தடவையும் புதிதாக தயார் செய்ய வேண்டும்.

புளிச்சாறு , கிராம்பு, இலவங்கப்பட்டை இது மூன்றையும் தண்ணியில் கரைத்து உள்ளுக்கு கொடுத்தால் உணவுப் பாதையில் உள்ள அழற்சிகளை சரி செய்து விடும்.

25 கிராம் புளியை 120 மில்லி தண்ணியிலே ஒரு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். அதற்குப் பிறகு 6 கிராம் சீனி சேர்த்துக் கொள்ள வேண்டியது, இது எதற்கு மருந்து தெரியுமா? GiDDINESS தலை லேசா இருக்கின்றது. Unsteady ஆக இருக்கின்றது. இதற்கு அது நல்ல மருந்து மற்றதை மறந்தாலும் இதை மட்டுமாவது நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2019

## 14.04.2019 முதல் 13.04.2020 வரை



**துலாம் இராசி நேயர் களே!**

விகாரி வருடம் தொடங் கும் பொழுது உங்கள் இராசி க்கு 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் சந்திரன் சஞ்ச ரித்துத் தொடங்குகின்றது. மேலும் சகாய ஸ்தானத்தில் சனி, கேது, குரு ஆகிய மூன்று கிரகங்களும் இருக்கின்றன. எனவே செய்யும் முயற்சிக ளில் வெற்றியும், திடீர் முன் னேற்றமும் இந்த ஆண்டு ஏற் படப் போகின்றது. பாராட்டும், புகழும் கூடும். நோயிலிருந்து விடுதலை பெற்றுச் சுறுசுறுப் பாகப் பணிபுரியப் போகிறீர்கள்.

12 இற்கு அதிபதியான புதன் 6 ஆம் இடத்தில் நீசம்பெற்றுச் சஞ்சரிக்கின்றார். எனவே விபரீத இராஜயோக அடிப்படை யில் வசதி, வாய்ப்புகள் பெரு கும். வாழ்க்கைத் துணை யோடு வந்த சச்சரவுகள் அக லும். பொதுநலத்தில் ஈடுபட்டி ருப்பவர்களுக்கு புதிய பொறுப் புகள் கிடைக்கும். உத்தியோக முன்னேற்றம் உண்டு.

3 இல் கேது இருப்பதால் குலதெய்வ வழிபாடு கூடுதல் நன்மையை வழங்கும். மன தில் தைரியமும், தன்னம்பிக் கையும் பிறக்கும். தீர்த்த யாத் திரைகள் மேற்கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். உறவி னர்களுக்காகவும் நீங்கள் தாராளமாகச் செலவிட முன் வரும் நேரமிது. சனி, கேது இரண்டும் குருவின் வீட்டி லேயே குருவோடு இணை ந்து சஞ்சரிப்பதால் கவுரவத் திற்கு ஏதும் குறைவு ஏற்ப டாது.

சுய ஜாதகத்தில் குருதிசை, குருபுத்தி மற்றும் கேதுதிசை, கேதுபுத்தி போன்றவைகள் நடைபெறுமேயானால் சிறப்புப் பரிகாரங்களைச் செய்து கொள் வது நல்லது.

பொதுவாக உங்கள் இராசி நாதன் சுக்கிரன் ஆவார். அதே நேரத்தில் சகாய ஸ்தானாதிப தியாக விளங்குபவர் வியா ழன் ஆவார். இரண்டும் ஒன் றுக்கொன்று பகைக்கிரகம் என்பதால் சில நேரங்களில் உங்களுக்கு தடுமாற்றங்கள் வரலாம். பணியாட்களால் தொல்லைகளும், பணியிடத் தில் பிரச்சினைகளும் வர லாம். உதவிக்கரம் நீட்டுவ தாகச்சொன்ன உறவினர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். எனவே இராகு- கேதுக்களுக்கு முறையான பிரீதிகளை யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகார மாகச் செய்து கொள்வது நல் லது.

9 இல் இராகு சஞ்சரிப்பதால் தந்தை வழி உறவில் கொஞ் சம் நெருக்கம் ஏற்படும். இது வரை உங்களை விட்டுவிலகி யிருந்த பெற்றோர்கள் இப் போது வந்திணைய விருப்பப்ப டுவர். அவர்கள் தரும் பண மழையிலும், அவர்கள் காட் டும் பாசமழையிலும் நனையப் போகிறீர்கள்.

வெளிநாட்டு முயற்சி ஒரு சிலருக்குக் கைகூடும். அதே நேரம் சனி, குரு மற்றும் பாம் புக்கிரகங்களின் திசாபுத்திகள் நடைபெறுமேயானால் குறுக் கீடு சக்திகள் வந்து சேரும்.

**தனுசு குருவின் சஞ்சாரம்**

**(14.4.2019 முதல் 17.5. 2019 வரையிலும், மீண்டும் 28.10.2019 முதல் 13.4. 20120 வரையிலும்)**

இக்காலத்தில் குருவின் பார்வை 7, 9, 11 ஆகிய இடங் களில் பதிகின்றது. குருவின் பார்வை பெற்ற இடங்கள் எல் லாம் புனிதமடையும் அல்லவா?

குருவின் பார்வை பலனால் கல்யாண வாய்ப்புகள் கைகூ டும். கல்யாண வயது வந்த பிள்ளைகளுக்கு ஜாதகபொ ருத்தம் பார்த்துக்கல்யாணம் செய்ய வேண்டுமென்று விரும் புவர்களுக்கு இப்பொழுது பொரு த்தமான ஜாதகங்கள் வந்து சேரும்.

வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்தால் வருமா னம் கூடுதலாகக் கிடைக்குமே என்று நினைத்தவர்களுக்கு இப்பொழுது மகிழ்ச்சியான செய்தி வரப்போகின்றது. அவர்கள் எதிர்பார்த்த வேலை இப்பொ ழுது கிடைக்கப்போகின்றது. களத்திர தோஷத்தின் காரண மாக கணவன், மனைவிக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டவர்கள் இப்பொழுது பிணக்குகள் அக ன்று இணக்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

அசையா சொத்துக்கள் வாங் குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெண்களின் பூப்புனித நீராட்டு விழாக்கள், பிள்ளைகளின் காதுகுத்து விழாக்கள், பெற் றோர்களின் மணி விழாக்கள் போன்றவைகள் நடைபெறும் நேரமிது.

குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் தந்தை வழி உறவில் நெருக்கம் அதிக ரிக்கும். பங்காளிப்பகை மாறும். ஆடை, ஆபரணச்சேர்க்கை உண்டு. பழைய ஆபரணங்க ளைக் கொடுத்துவிட்டுப் புதிய ஆபரணங்கள் வாங்கும் சூழ் நிலை உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வந்து அணிந்து அழகு பார்க் கும் யோகம் உண்டு. செயல் திறனில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து வியக் கும் செய்தி வந்து சேரும். வாக னம் வாங்கும் முயற்சியில் ஆர் வம் காட்டுவீர்கள். முன்னோர் கள் விட்டுச்சென்ற ஆலயத் திருப்பணிகளில் அதிக அக் கறை காட்டுவீர்கள். நீண்ட தூரப்பயணங்களால் நிம்மதி கிடைக்கும்.

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர். புதிய திருப்ப ங்கள் பலவும் வந்து கொண் டேயிருக்கும். எதிர்பாராத தன இலாபம் கிடைக்கலாம். குரு வின் பார்வை இலாப ஸ்தானத் தில் பதிவதால் தொழில் சூடு பிடிக்கும். பங்குதாரர்கள் பக்க பலமாக இருப்பர். புதிய ஒப்பந் தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வர். வெளிநாட்டில் தொட ர்பு கொண்டு ஏற்றுமதி, இறக்கு மதி வணிகம் செய்பவர்களு க்கு உன்னதமான நேரமிது. மூத்த சகோதரர்களின் ஒத்து ழைப்போடு முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்வீர்கள். அரசுவழி ஆதரவுகள் உண்டு. பொதுநலம் மற்றும் அரசியலில் இருப்பவர்கள் பிள்ளைகளை களத்தில் இறக்கி வெற்றி காண் பர்.

**விருச்சிக குருவின் சஞ்சாரம்**

**(18.5.2019 முதல் 28.10. 2019 வரை)**

இக்காலத்தில் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக் கின்றார். குறிப்பாக 7.8.2019




**ஜோதிட கலாமணி சிவல்புரி சிங்காரம்**

வரை வக்கிர இயக்கத்திலும் பிறகு வக்கிர நிவர்த்தியாகி விருச்சிகத்திற்கு உள்ளேயே உலா வருகின்றார். இதன் பல னாக மிகச்சிறந்த பலன்கள் உங்களுக்கு வரப்போகின்றது. ஜீவன ஸ்தானத்தில் குருவின் பார்வை பதிவதால் உத்தி யோக முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசு வேலைக்கு ஏற்பாடு செய்தவர் களுக்கு அது கைகூடும். வீண்பழிகள் அக லும். வழக்குகள் சாதகமாக அமையும்.

அஷ்டம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால்ஆரோக்கியத்தொல்லை அகலும். எதிரிகள் விலகி இனிய பலன் கிடைக்கும். உதிரி வரு மானங்கள் வருவதில் இருந்த தடைகள் அகலும். வீண் விரோ தங்கள் விலகும். வழிவழியாக வந்த கடன் சுமையைக் குறை க்க புதிய திட்டங்களைத் தீட்டு வீர்கள். வரவு-செலவுகளில் திருப்தி ஏற்படும். வீடு, இடம் வாங்குவதில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.

குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிக ளில் எதிர்பார்த்த பலன்கள் எளிதில் உங்களுக்கு கிடைக் கும். சேமிப்பு அதிகரிக்கும். தேக்க நிலை மாறி ஆக்கநிலை உருவாகும். பணிகளில் இரு ந்த தொய்வு அகலும். திருப்ப ணிகளுக்கு கொடுத்துதவி மகிழ் வீர்கள். தொழிலை விரிவு செய் யும் முயற்சி கைகூடும். அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆத ரவோடு வளர்ச்சியை மேலும் பெருக்கிக் கொள்வீர்கள்.

**சனியின் சஞ்சார நிலை**

ஆண்டு முழுவதும் சனி பகவான் 3 ஆம் இடத்தில் சஞ் சரிக்கின்றார். இடையில் 8.5. 2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியிலேயே வக்கிரம் பெறுகின்றார். சனி பகவானின் பார்வை உங்கள் இராசிக்கு 5, 9, 12 ஆகிய இடங்களில் பதிகி ன்றது.

எனவே வாரிசுகள் பிறப் பதில் இருந்த தடைஅகல இப் பொழுது வாய்ப்பு உருவாகப் போகின்றது.

எனவே சுயஜாதக அடிப் படையில் புத்திர ஸ்தானம் பார் த்து அதற்குரிய ஸ்தல வழிபா டுகளை மேற்கொண்டால் புத் திரப்பேறு கிடைக்கும். பூர்வீக சொத்துக்களும் கைக்கு கிடைக் கும்.

பஞ்சாயத்துக்கள் உங்களு க்கு சாதகமாக அமையும். பணி உயர்வு பற்றிய தகவலும் கிடை க்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

சனியின் வக்கிர காலத்தில் தாயின் உடல் நலத்தில் பாதிப் புகள் ஏற்பட்டு அகலும். பிள் ளைகளை உங்கள் மேற்பார் வையில் வைத்துக்கொள்வது நல்லது.

**இராகு-கேதுக்களின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இராகு வும், மூன்றாமிடத்தில் சஞ்சரிக் கும் கேதுவும் நல்ல பலன் களை அள்ளி வழங்கப் போகி ன்றார்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும். பொருளாதாரம் உச்சநிலை அடையும். சகோதர வர்க்கத்தி னர்களின் ஒத்துழைப்பு கிடை த்து சந்தோசப்படுவீர்கள். பிறரு க்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்ததொகை வந்து சேரும். வீடு, நிலம் கிரயம் செய்யும் முயற்சி கை கூடும்.

**சனி-செவ்வாய் பார்வைக்காலம்**

**(14.4.2019 முதல் 23.6. 2019 வரை)**

இக்காலத்தில் அதிக விழிப் புணர்ச்சி உங்களுக்குத் தேவை. எதைச் செய்தாலும் ஒருமுறைக் குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டும். சுகக்கே டுகளும், வைத்தியச் செலவுக ளும் வரலாம். கொடுத்த வாக் கைக் காப்பாற்ற இயலாது. பல பணிகள் பாதியில் நிற்கின் றதே என்று கவலைப்படுவீர் கள். வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத்தொடக் கம் மிக சிறப்பாக இருக்கின் றது. வாய்ப்புகள் வந்து கொண் டேயிருக்கும்.

கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். வாழ்க் கைத் துணையாலும், வாரிசு களாலும் வருமானமும் என்ற நிலைமை உருவாகி பொரு ளாதார நிலை உச்சம் அடை யும்.

உத்தியோகத்தில் உள்ள வர்கள் வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு வெளியில் வந்து சுயதொழிலைச் செய்து கைநி றையச் சம்பாதிக்கும் வாய்ப்புக் கைகூடிவரும்.

பக்கத்து வீட்டாரின் பகை மாறும். தாயின் ஆதரவும், சகோதர வர்க்கத்தினர்களின் ஆதரவும் திருப்திகரமாக இருக்கும். மனக்குழப்பம் அக ன்று தெளிந்த சிந்த னையோடு செயற்படுவீர் கள்.

பிள்ளைகளின் திருமணப் பேச்சுக்கள் கை கூடும். பிரச் சினைகள் படிப்படியாகக் குறை யும். குடும்பத்தில் மூன்றாம் நபரின் தலையீட்டால் வந்த பிரச்சினை முற்றிலும் மாறும்.

கடுமையாக முயற்சித்தும் சென்ற ஆண்டு நடைபெறாத சில காரியங்கள் இந்த ஆண்டு துரிதமாக நடைபெறும். ஆரோக்கியத் தொல்லை அகல மாற்று மருத்துவம் கைகொடுக்கும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு.

பணி புரியும் பெண்களுக்கு சக ஊழியர்களால் வந்த தொல்லை அகலும். மேலதி காரிகள் நீங்கள் கேட்ட சலு கைகளை வழங்குவர்.

குலதெய்வ வழிபாடும், இராகு-கேதுக்களுக்குரிய சிற ப்பு ஸ்தல வழிபாடும் அனு கூல நட்சத்திரமன்று செய் தால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**வருடம் முழுவதும் வசந்த காலமாக வழிபாடு**

வெள்ளிக்கிழமை தோறும் அஷ்டலட்சுமி கவசம் பாடி இல்லத்தில் லட்சுமி பூஜை செய்து வருவது நல்லது. பஞ் சமி திதியன்று வாராஹி வழி பாடு செய்தால், வளர்ச்சியில் ஏற்பட்ட தளர்ச்சி அகலும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'மன்னிப்பு கேட்க மாட்டேன்'

## முதலமைச்சர் சாமர சம்பத் விளக்கம்



(கொழும்பு)

ஊவா மாகாண சுகாதாரப் பணிப்பாளரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்றும் தெமோதரை வைத்தியசாலையை திடீரென்று மூடியமை, பணிப்பகிஷ்கரிப்பால் ஏற்பட்டுள்ள அசெளகரியங்களைக் கருத்திற்கொண்டு, வைத்தியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், தெமோதரை வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதியை, பிரதேச மக்கள் 100 வருடங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் எனினும் அவ்வீதியை மூடுவதற்கு, வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருவதால், இரு தரப்பினருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

சுகாதார பணிப்பாளரை நிந்தித்து அச்சுறுத்தியதாகக் கூறப்பட்டால், பணிப்பாளரும் வைத்தியர்களும் தனக்கெதிராகச் சட்டநடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும் அதனை விடுத்து, வைத்தியசாலையை மூடி, பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதால் நோயாளர்களே பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

சுகாதாரப் பணிப்பாளரிடமோ, வேறு யாரிடமோ மன்னிப்பு கேட்கவேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# சீருடை வவுச்சருக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைக்காக, வவுச்சர் வழங்குவதற்கு கல்வியமைச்சு எடுத்த தீர்மானத்தால் அரசாங்கத்துக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது என, அரச நிறுவனங்களில் ஏற்பட்ட ஊழல், மோசடிகள் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர், கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவே, கல்வியமைச்சர் மற்றும் அந்த அமைச்சின் அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார் என, அந்த ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கல்வியமைச்சின் மேற்படி தீர்மானத்தின் ஊடாக, 538 மில்லியன் ரூபாய் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதென, அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பிலான, வாக்குமூலத்தை பெற்றுக்கொள்வதற்காக, விஜயதாஸ ராஜபக்ஷ எம்.பி, ஆணைக்குழுவுக்கு இவ்வாரத்துக்குள் அழைக்கப்படுவார் என்றும் அறியமுடிகின்றது. (இ-7)

# இந்திய வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல்



(மாத்தறை)

இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் மாத்தறையிலுள்ள இந்தோல தோட்டத்தில் 50 புதிய வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து, நிதி அமைச்சர் மங்கள சமரவீர, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் ஆகியோர் அடிக்கல்லை நாட்டினர்.

இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் இலங்கையில் 14 ஆயிரம் வீடுகள் கட்டப்படவுள்ளன. இந்த வீடுகள் பெருந்தோட்டப் பகுதியில் கட்டப்படவுள்ள நிலையில் அதில் ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 3000 வீடுகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள வீடுகளுக்கான காணிகள் அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டதையடுத்து அவற்றின் நிர்மாண வேலைகள் ஆரம்பமாகும். நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, மொனராகலை உள்ளிட்ட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு புறம்பாக 50 மாதிரிக் கிராமங்களில் 1200 வீடுகளுக்கு மேல் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை உள்ளிட்ட தென் மாகாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளன. (இ-7)

# பொருளாதாரப் பின்னடைவுக்கு அரச தரப்பு பொறுப்பு கூற வேண்டும்

## சிசிர ஜயகொடி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பொருளாதார- அபிவிருத்தி ரீதியாக நாட்டில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி.மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன பொறுப்புக்கூற வேண்டுமென மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே சிசிர ஜயகொடி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"யுத்தம் இடம்பெற்ற காலத்தில் நாட்டு மக்கள் அச்சத்துடன்தான் வாழ்ந்தார்கள். இன்று பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்து தமது அன்றாட வாழ்க்கை தொடர்பில் மக்கள் அச்சத்துடன் காணப்படுகிறார்கள்.

அரசாங்கம், அனைத்து மக்களையும் இன்று பாதிப்படையச் செய்துள்ளது. பெரிய வியாபாரங்கள் முதல், கைத்தொழில் வரை எல்லாத் துறைகளும் வீழ்ச்சியடைந்து வருகின்றன.

இவ்வாறான அரசாங்கத்தை விரட்ட, கடந்த ஒக்டோபர் மாதம் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால், ஜனநாயகம் என்ற போர்வையில் எமது முயற்சி தோல்வியடைந்தது.

அன்று நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தால், இலங்கைக்கு இந்தநிலைமை ஏற்பட்டிருக்காது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய மூன்று கட்சிகளும்தான் பொறுப்புக் கூற வேண்டும்.

இந்தக் கட்சிகள் அன்று மேற்கொண்ட செயற்பாடுகள்தான், இன்று இடம்பெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தலை தடுத்து நிறுத்தின.

ஜனநாயகம் தொடர்பில் அதிகமாகக் கதைக்கும் இந்த மூன்று கட்சிகளும் மக்களுக்காக எந்தவொரு பயனுள்ள செயற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை.

இவர்கள் எல்லாம் ஜனநாயகம் தொடர்பில் கதைப்பதுதான் எமக்கு கவலையாக இருக்கிறது. இந்த நாடு, அபிவிருத்தி ரீதியாக இன்னும் முன்னேற்றமடையவில்லை என்பதை அனைவரும் இன்று ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

வரவு- செலவுத் திட்டம் உள்ளிட்ட எல்லா செயற்பாடுகளும், மக்களை முட்டாளாக்கும் செயற்பாடாகவே இருக்கிறது" என சிசிர ஜயகொடி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரபல இசைக்கலைஞர் ஜனவர்த்தன காலமானார்



பிரபல இசைக்கலைஞர் எச்.எம்.ஜயவர்த்தன தனது 69 ஆவது வயதில் நேற்றுக் காலமானார். களுபோவில தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த போதே அவர் உயிரிழந்துள்ளார். (இ-7)

# புதிய நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

ஈர வலயங்களில் புதிய நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் நிலைகள் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ஜானகி மீகஸ்தென்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

நிலவும் அதிக வெப்பம் காரணமாகவே ஈர வலயங்களில் புதிய நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஈர வலயங்களில் அதிகளவு உணவு உற்பத்தி செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர், வறட்சி காரணமாக உணவு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக, மகாவலி மற்றும் களனி ஆற்றை அண்மித்த பகுதிகளில் புதிய நீர்த்தேக்கங்களை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்நிலைகள் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ஜானகி மீகஸ்தென்ன சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# தனியார் பிரிவு ஊழியர்கள் தொடர்பில் பாராளுமன்றுக்கு விரைவில் புதிய சட்டம்



(கொழும்பு)

தனியார் பிரிவு ஊழியர்கள் தொடர்பில் புதிய சட்டம் ஒன்றை விரைவில் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனியார் பிரிவு ஊழியர்களுக்காக கொண்டுவரப்பட உள்ள புதிய சட்டத்தின் மூலம் தொழிலாளர் சட்டங்கள் இரத்துச் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் தொழிலாளர்களுக்காக கொண்டுவரப்பட உள்ள புதிய சட்டத்தின் ஊடாக ஊழியர்களின் குறைந்தபட்ச சேவை நேரத்தை 8 மணித்தியாலத்தில் இருந்து 12 மணித்தியாலமாக அதிகரிக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தச் சட்டத்தின் மூலம் தனியார் பிரிவு ஊழியர்களுக்கு போயா தினத்தில் மாத்திரம் விடுமுறை வழங்கப்படும் எனவும் ஏனைய தினங்களில் விடுமுறை வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் நிறுவன உரிமையாளர்களே தீர்மானம் எடுப்பார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# போதைப்பொருளை விற்க முயற்சித்த ஐவர் சிவனொளிபாதமலையில் கைது

(ஹற்றன்)

சிவனொளிபாதமலைக்கு செல்லும் இளைஞர்களுக்கு மிகவும் சூட்சுமமான முறையில் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்த ஐவரை ஹற்றன் வலய குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த ஐவரில் பிரதான சந்தேக நபரிடமிருந்து 760 மில்லி கிராம் அடங்கிய 4 பொதிகளும் ஏனைய சந்தேக நபர்களிடமிருந்து 1080 மில்லி கிராம் பொதிகளும் கைப்பற்றியதாக குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




இலங்கை வரைபடம் பிரித்தானியர் ஆட்சிக்காலம்

இருந்தபோதிலும் இவ்விரு புதிய சபைகளுள் இலங்கையின் அரசியல் அபிவிருத்திக்குச் சட்ட நிரூபண சபையே அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

இச்சபை பிரதம நீதியரசர், தரைப்படைகளின் கட்டளையதிகாரி, கணக்காளர் நாயகம், குடியேற்றவாதச் செயலாளர், மேல்மாகாண அரசாங்க அதிபர், குடியேற்ற பொருளாளர், நில அளவை நாயகம், கொழும்பின் சுங்க கலெக்டர் ஆகியோரைக் கொண்டிருந்தது.

இயலுமான அளவில் சம விகிதத்தில் மதிப்புக்குரிய ஐரோப்பிய வர்த்தகர்கள் அல்லது ஐரோப்பிய உள்ளூர் வாசிகள் என்பவர்களுடன் சுதேசிகள் மத்தியிலாக உயர் வகுப்பு மக்கள் மத்தியிலிருந்து ஆறு உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்கள் நியமிக்கப்பட வேண்டியிருந்தது.

சட்ட நிரூபண சபையின் கட்டுமானமும் 1910 வரையில் பெருமளவுக்கு மாற்றத்துக்கு உள்ளாகாதிருந்தது. கண்டிய முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடம் அளிப்பதற்காக 1889 இல் இச்சபையின் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் தொகை ஆறிலிருந்து எட்டாக உயர்த்தப்பட்டது.

மூன்று வருடகாலத்துக்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பது ஐந்து வருட காலமாக மாற்றமும் செய்யப்பட்டது.

குடியேற்ற சட்ட நிரூபண சபை ஒன்றை நிறுவுவதற்கு எப்போதுமே உள்ள அதியாவசிய காரணம் குடியேற்ற நாட்டு வாசிகள் பிரதிநிதித்துவப்படல் வேண்டும் என்பதாகும்.

அரச செயலாளருக்கு நம்பகமானதும் மிகச் சரியானதுமாக தகவல்கள் கிடைப்பதற்கான மாற்றுவழிகள் இருக்க வேண்டும் என்பதனாலும் குடியேற்ற நாட்டின் பிரச்சினைகளையிட்டு உள்ளூர் அபிப்பிராயத்தைக் கணிக்கவும் தேசாதிபதியினால் முன்வைக்கப்படும் திருத்தங்களை மதிப்பீடு செய்யவுமே குடியேற்ற நாட்டு வாசிகளின் பிரதிநிதித்துவம் அவசியமாயிற்று.

இச்சபை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் அது மேலும் பிரதிநிதித்துவம் கொண்டதாகி

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

1910 இலும் 1920 இலும் கரையோரச் சிங்களவர், வடக்கு, கிழக்கு, மேற்கு மாகாண இலங்கைத் தமிழர் , இந்தியத் தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், ஐரோப்பியர் ஆகிய இனங்களிடையே சமநிலையான இன அமைப்பைப் பேணுவதற்கான நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இருப்பினும் சட்டசபையின் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களின் பிரதிநிதித்துவத்துடன் தேசாதிபதியே தொடர்ந்து இலங்கையை ஆளும் பொறுப்பைக் கொண்டிருந்தார்.

உள்ளூர் வாசிகளின் அனுபவமின்மை, முதிர்ச்சியற்ற அரசியல் அணுகுமுறை என்பன காரணமாக கோல்புறூக் சட்ட நிருபண சபைக்குப் பிரதிநிதிகள் தேர்வு நியமனமூலமே மேற்கொள்ளப்பட வேண்டுமெனச் சிபாரிசு செய்தார்.

இதற்கிணங்க ஆறு உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் இன அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். ஆரம்பத்தில் இந்த அங்கத்துவ விகிதம் மரபு வழியில் மூன்று ஐரோப்பியர்கள் மற்றும் சிங்கள, தமிழ், பறங்கிய இனங்களிலிருந்து தலா ஒரு அங்கத்தவர் என வகுக்கப்பட்டது.

1889 இல் கண்டிச் சிங்களவர் ஒருவர் முஸ்லிம் ஒருவர் அங்கத்தவர்களாக தெரிவாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிலை 1910 வரையில் தொடர்ந்தது.

பொதுவாக அரசாங்கத்திற்கும் சபைக்கும் இடையில் சுமுக உறவு நிலவியது. எப்போதாவது நிதி சம்பந்தமான வேறுபாடுகள் குறிப்பாக நிதிக்கஞ்சத்தனம் காரணமாக உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் விரும்பிய அளவுகளில் வேலைக்கான செலவுக்கு அரசாங்கம் பணம் ஒதுக்கீடு செய்யத் தயங்கிய போது ஏற்படவே செய்தன.

இச்சந்தர்ப்பத்தில் உத்தியோகப்பற்றற்ற தமிழ் அங்கத்தவர்கள் எவ்வாறு தமிழர்களின் அரசியல் முன்னேற்றத்துக்காக தமது அரசியல் பாத்திரத்தை வகித்தனர் என்பதை ஆராய்வது பயனுள்ளதாகும்.

அதேவேளையில் இலங்கைத் தமிழர்கள் எவ்வாறு இந்த அரசியல் நடைமுறையில் ஈடுபட்டிருந்தனர் என்பதையும் அவர்களின் அரசியல் இலட்சியங்களுக்கு எது தூண்டுகோலாக இருந்தது என்பதையும் விளங்கிக் கொள்வது முக்கியமாகும்.

இந்த விடயங்களை அடையாளம் காண்பதற்காக சட்ட நிருபண சபையில் தமிழர்களின் ஆரம்பப் பங்களிப்பு சுருக்கமாக எடுத்துக்காட்டப்படும். மேலும் குடியேற்ற அரசாங்கத்தினால் புதிய சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட 1879 இலிருந்து 1910 வரையிலான காலகட்டம் பின்னர் கவனத்திற்கு எடுக்கப்படும்.

இந்த இன ரீதியான பிரதிநிதித்துவத்திற்கு எதிராக உள்ளூர் இலங்கை மக்களிடையே காணப்பட்ட இன ரீதியான வெறுப்புணர்வு சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்படும்.

### சட்ட நிருபண சபையும் தமிழ்ப் பிரதிநிதித்துவமும்

குடியேற்றவாத அரசாங்கம் சட்ட நிருபண சபையை அறிமுகப்படுத்திய போது அவர்கள் தமிழ் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உயர் வர்க்கப் பணம்படைத்த கல்விமான்களான தமிழரைத் தேடினர். இந்தப் பதவிக்கு ஆறுமுகநாபிள்ளை குமாரசுவாமியை அதி பொருத்தமான வேட்பாளராகக் கண்டனர்.

ஆ.குமாரசுவாமி உடுப்பிட்டிக்கு அண்மையிலுள்ள கெருடாவில் கிராமத்தில் 1873 ஆம் ஆண்டு பிறந்தார். கொழும்புக்கு அவர் வந்த பொழுது இவரது பண்புமிக்க நடத்தை, திறமை, வியாபார நுண்ணறிவு என்பவற்றினால் நகரத்தின் முன்னணித் தமிழர்களின் நன்மதிப்பை விரைவில் சம்பாதித்துக் கொண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தலைமையில் விவசாய கலாசாரத்தின் தேசிய புத்தரிசி விழா



பிரித்பாராயண முழக்கங்களுக்கு மத்தியில் இலங்கையின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வருகைதந்திருந்த விவசாய குடிமக்கள் பாத்திரம் நிறையும் வரை புத்தரிசியைக் கொட்டினர். புத்தரிசி விழாவில் கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்களும் பாத்திரத்தில் அரிசி நிரப்புவதில் கலந்துகொண்டனர்.

பண்டைய அரசர் காலம் முதல் பின்பற்றிவரும் இந்த சம்பிரதாயத்தை பூர்த்தி செய்வதற்கு நாடு முழுவதிலுமுள்ள விவசாயிகள் கலந்துகொண்டதுடன், மழையையும் சௌபாக்கியத்தையும் தன்னிறைவான விவசாயத்தையும் பொருளாதார சுபீட்சத்தையும் வேண்டி பல்வேறு பிரார்த்தனைகள் இதன் போது இடம்பெற்றன.

விவசாய கலாசாரத்தின் 52 ஆவது தேசிய புத்தரிசி விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் வரலாற்று சிறப்பு மிக்க அநுராதபுர ஜயஸ்ரீ மகாபோதி முன்னிலையில் இடம்பெற்றது.

அறுவடைசெய்யப்பட்ட நெல்லை ஜயஸ்ரீ மகாபோதிக்கு காணிக்கையாக செலுத்தும் கோலாகல விழா அடமஸ்தானாதிபதி வண. பல்லேகம சிறினிவாச நாயக்க தேரரின் ஆலோசனைக்களுக்கமைய விவசாய அமைச்சும் கமநல சேவைகள் திணைக்களமும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

ஜயஸ்ரீ மகாபோதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட காலம் முதல் ஆரம்பிக்கப்பட்டதாக கருதப்படும் இந்த புத்தரிசி விழா ஊர்வலமானது, சிங்கள முறைப்படி மங்கள வாத்தியங்களுடனும் சிங்கள கலாசார அம்சங்களுடனும் கிழக்கு வாசலின் ஊடாக ஜயஸ்ரீ மகா போதியை வலம்வந்து அங்கு பிரத்தியேகமாக வைக்கப்பட்டுள்ள தங்க முலாம் பூசிய பாத்திரத்தில் புத்தரிசி நிரப்பும் பணியும் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது படியரிசியை வண.பல்லேகம சிறினிவாச நாயக்க தேரர், விவசாய அமைச்சர் பீ.ஹரிசன் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் தலைமை பதவி வகிக்கும் விவசாயிகளும் பாத்திரத்தில் சமர்ப்பித்தனர்.



சம்பிரதாயபூர்மாக ஜயஸ்ரீ மகாபோதிக்கு சமர்ப்பிக்கப்படும் தேன் பாத்திரத்தினை வேடுவ தலைவர் வன்னில எத்தன் ஜனாதிபதியிடம் கையளித்தார். (இ-7)

# வெலிக்கடை சிறையிலிருந்து கைதிகள் திடீரென இடமாற்றம்

(கொழும்பு)

போதைப்பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கைதிகளை வெலிக்கடை சிறையிலிருந்து வேறு சிறைகளுக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரசபையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கைதிகள் பட்டியலில் பிரபல பாதாள உலகக்குழு உறுப்பினர் வெலேசுதாவும் உள்ளடங்குகின்றார் என சிறைச்சாலை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக இவ்வாறு மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், சில கைதிகளுக்கு இடையில் காணப்படும் தொடர்புகளை தடுத்து நிறுத்தும் நோக்கில் இவ்வாறு கைதிகள் மாற்றம் செய்யப்படவுள்ளனர்.

வேறு சிறைக்கு மாற்றப்படவுள்ள கைதிகளில் அதிகளவானவர்கள் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் எனவும், இவர்களுக்கான தண்டனை நிறைவேற்றப்படும் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் மீளவும் இவர்கள் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# 'லயன்களை ஒழிப்பதே இலக்கு'

(ஹற்றன்)

பெருந்தோட்டங்களில் தனி வீட்டுத் திட்டத்தின் கீழ், வீடுகளை நிர்மாணிக்கும்போது, லயன்கள் உடைக்கப்பட வேண்டும் என்றும், 'தோட்டம்' என்ற வார்த்தை ஒழிந்து, கிராமம் என்ற முகவரிக்கு, பயனாளிகள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதே, தமது இலக்கு என்றும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் வீ.புத்திரசிகாமணி தெரிவித்தார்.

தனி வீட்டுத் திட்டத்தின் கீழ், நுவரெலியா மூன்பிலேன் தோட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 50 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயனாளிகளுக்கு வழங்கப்படும் வீடுகள், தரங்குறைந்தவை, ஒழுங்கற்றவை என்று கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் பயனாளிகளின் மேற்பார்வையின் கீழே, வீடமைப்புப் பணி முன்னெடுக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

பயனாளிகளுக்கு வீடுகளைக் கையளிக்கும்போது, குறித்த வீட்டின் குறை, நிறைகள், வினவப்பட்டு பயனாளிகள் வழங்கிய உறுதிமொழிக்குப் பின்பே வீடுகள் கையளிக்கப்படுகின்றன என்றும் ஆறு மாதத்தில் ஏதேனும் குறைபாடுகள் நிகழ்கிறதா என்பதை அவதானித்து, அது தொடர்பில் பயனாளி தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1689

### ராஜ்

மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம்... மானமற்ற ஒருவனுடன் போராடுவது சிரமமான காரியம்- பெரியார்



### கௌசிக்

இந்த உலகத்தையே ஒரு கலக்கு கலக்கனும்னு ஆசை... ஆனால் அவ்வளவு பெரிய கரண்டிக்கு எங்க போறதுன்னு தெரியல



### ரேகா

சூரியனைச் சுற்றினால் வெந்து போவீர்கள்... சுடிதாரைச் சுற்றினால் நொந்து போவீர்கள்...



### கஜந்தன்

கூகுளில் எதைத் தேடினாலும் கிடைக்கும்... உண்மைதான்... ஆனால் உஜியில் தேடாதீர்கள் கூகுளே கிடைக்காது



### சங்கவி

சாமிக்கு மொட்டை போடனுமுன்னு சொன்னாங்க நம்பி கோவிலுக்குப் போனா எனக்கு மொட்டை போட்டுட்டாங்க... வர்ற கோபத்துக்கு...



### சானு

ஜக்கு: Iam going to sleep இதுக்கு என்னடா மீனிங்
மக்கு: நான் தூங்கப் போறேன்
ஜக்கு:டேய்... ப்ளீஸ் டா... பதில் சொல்லிட்டு தூங்கப்போடா



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியை நம்ப முடியாது!

## விரக்தியின் விளிம்பில் மகிந்த அணி

(மினுவாங்கொட)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அதன் தலைமைத்துவத்தையும் தொடர்ந்தும் நம்ப முடியாது என்பதால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தை தொடர்பில் மீண்டும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் எனவும் கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர்கள் இது சம்பந்தமாக தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

வரவு-செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாததன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் நாட்டு மக்களை ஏமாற்றியுள்ளது எனவும் அவர் குற்றம்சாட்டினார்.

மினுவாங்கொடை உடுகம்பளை பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கனவு வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. இதற்கு முதல் நாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திற்கு வந்திருந்த ஜனாதிபதி தற்போதைய அரசாங்கத்தை மாற்ற வேண்டும் எனக் கூறினார்.

என்னை வேலை செய்ய விடுவதில்லை. காலை -பிடித்து இழுக்கின்றனர் என்று ஜனாதிபதி புலம்பியதுடன் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தார். எனினும் மறுநாள் வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன் மூலம் ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மறைமுகமாக ரணிலின் அரசாங்கத்திற்கு ஆசி வழங்கி, அரசாங்கத்தை கொண்டு நடத்த உதவியுள்ளது. பகலில் மிகேல் இரவில் டேனியல் கொள்கையையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பின்பற்றி வருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்த நடத்தையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கத்தை விமர்சித்தால், நெஞ்சை நிமிர்த்தி தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதியிலிருந்து கட்சியினரையும் நாட்டையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏமாற்றி வருகிறது.

பின்னால் இருந்து கத்தியால் குத்தி வருகிறது. தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் ஏமாறத் தேவையில்லை. இரவில் விழுந்த குழியில் பகலில் விழ முடியாது.

இதன் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் ஏற்படுத்த முயற்சிக்கும் கூட்டணி குறித்து மீளாய்வு செய்ய வேண்டும்.

நாங்கள் இப்படி பேசும் போது ஐக்கிய தேசியக்கட்சியின் கடைக்குப் போகும் சுதந்திரக்கட்சியி



னருக்கு வலிக்கின்றது. நாங்கள் ஐக்கிய தேசியக்கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர். ரணிலுடன் எங்களுக்கு எந்த ஒப்பந்தமும் இல்லை. நாங்கள் நாட்டு மக்களுடன் மட்டுமே ஒப்பந்தம் செய்து கொள்வோம்.

ரணிலையும் ரணில் அரசாங்கத்தையும் காப்பாற்றும் அணியினருடன் கூட்டணி வைக்க வேண்டாம் என்றே நாட்டு மக்கள் கூறுகின்றனர்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலின் போது ஒரு வாக்கும் பெறுமதியானது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தபாயவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு



படுகொலை செய்யப்பட்ட, பத்திரிகையாசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபா ராஜபக்ஷவுக்கு எதிராக, சிவில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

அமெரிக்க நீதிமன்றத்திலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்காவுக்குச் சென்றுள்ள கோத்தபாய ராஜபக்ஷ, எதிர்வரும் 12 ஆம் திகதி வரையிலும் அங்கு தங்கியிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கன்னிப்பயணத்தை ஆரம்பித்த பெலியத்தைக்கான புகையிரதம்




(மாத்தறை)

மாத்தறையிலிருந்து பெலியத்தை வரையிலான புகையிரத சேவை நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை 8.30 மணி அளவில் மாத்தறை புகையிரத நிலையத்திலிருந்து பெலியத்தை வரை முதலாவது பொதுமக்களுக்கான புகையிரதப் பயணம் ஆரம்பித்து வைக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 27 கிலோ மீற்றர் தூரம் கொண்ட புதிய புகையிரதப் பாதையில் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் புகையிரதங்கள் பயணிக்க முடியுமெனவும் அத்துடன் மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் இந்தப் பாதையில் பயணிக்கும் வகையிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மாத்தறை - பெலியத்த புகையிரத நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் பொறியியலாளர் பிரியந்த தீகல தெரிவித்துள்ளார்.

மாத்தறை - பெலியத்த புகையிரதப் பாதையின் முதலாவது புகையிரதப் பயணம் காலை மாத்தறை புகையிரத நிலையத்தில் இருந்து ஆரம்பி க்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணியிலிருந்து நேர சூசிக்கு அமைய புகையிரதப் போக்குவரத்து இடம்பெறவுள்ளதாகவும் பொறியியலாளர் பிரியந்த தீகல தெரிவித்தார். (இ-7)

# சர்வதேச ஆசிய அரசியல் மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு இராப்போசனம் வழங்கிய ஜனாதிபதி



(கொழும்பு)

சர்வதேச ஆசிய அரசியல் கட்சி மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு கோட்டை, ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராப்போசன விருந்தொன்றை வழங்கினார்.

ஆசிய அரசியல் கட்சிகளுக்கான சர்வதேச மாநாடு மார்ச் மாதம் 5 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமானதுடன், ஆசிய பிராந்திய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 90 உறுப்பினர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

2000 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச [illegible] சிகள் மாநாடு (ICAPP) ஆசிய பிராந்திய நாடுகளின் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கிக்கொண்ட அமைப்பாகும்.

ஆசிய நாடுகளின் புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையை மேம்படுத்துவதற்காக பல்வேறு கருத்துக்களைக்கொண்ட அரசியல் கட்சிகள் தமது கருத்துக்களை பகிர்ந்துகொள்வதற்கும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் வருடாந்தம் இடம்பெறும் இந்த மாநாடு இம்முறை இலங்கையில் இடம்பெற்றது.

மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுடன் சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி தான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு பல்வேறு நாடுகளுக்கு விஜயம் செய்ததாகவும் அதன் மூலமாக



பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 100 | 160 |
| தக்காளி | 80 | 60 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 110 | 80 |
| கோவா | 70 | 50 | 50 | 80 |
| கரட் | 70 | 80 | 80 | 120 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 |
| புடோல் | 90 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 90 | 75 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 65 | 100 |
| பாகற்காய் | 140 | 140 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 70 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 75 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 40 | 100 |
| கறிமிளகாய் | 180 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 250 | 320 |
| போஞ்சி | 120 | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 140 | 170 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 160 | 140 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 180 | 140 | 120 | — |
| முள்ளங்கி | 80 | 80 | 30 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 120 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏக்கத் தீ...



தென்தமிழ்நாட்டின் கடைக் கோடியில் உள்ள ஒரு கிராமம். மழை லேசாகத் தூறிக் கொண்டிருந்தது.

குண்டும் குழியுமாய் மழை நீர் தேங்கி நாற்று நடும் அளவிற்கு சேறும் சகதியுமாய் இருந்த அந்தத் தெருவின் ஓரத்தில் சிறுவர் கூட்டம் கோலிக் குண்டு விளையாடிக் கொண்டிருந்தது.

“ஏலேய்... காசி... காசி...” என்ற குரல் பக்கத்துக் குடிசையிலிருந்து ஒலித்தது.

ஏக்கத் தீ அந்தச் சிறுவர் கூட்டத்திலிருந்து காசி தலை தெறிக்க ஓடிவந்தான். வயது பன்னிரண்டு இருக்கும். போன வருடம் தீபாவளிக்கு முதல் நாள் இரவு இருபது ரூபாய்க்கு சந்தையில் வாங்கிய சட்டையை அணிந்திருந்தான். அது கசங்கிப் போய், ஆங்காங்கே கிழிந்திருந்தது.

“என்னப்பா..?”

“எலேய்... அடுத்த வாரம் தீபாவளி வருதுல்... அதுக்கு உனக்கு புது சொக்கா எடுக்க டவுனுக்குப் போறோம்.... சீக்கிரம் கிளம்பு...' என்று குடிசைக்குள் இருந்து வெளியே எட்டிப்பார்த்தபடியே, மருதப்பன் சொன்ன அடுத்த விநாடி, “எலே.. கும்மிடியான்... நான் டவுனுக்குப் போய் புது சொக்கா வாங்கப் போறேண்டா... அதுவும் ஜீன்ஸ் சொக்காடா...'

என்று தெருவுக்கே கேட்குறமாதிரி கத்திக் கொண்டே வானத்துக்கும் பூமிக்கும் குதித்தபடி குடிசைக்குள் நுழைந்தான்.

டவுனிலிருந்து புதுத் துணிகள் வாங்கிக் கொண்டு திரும்பினார்கள். காசிக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவனுக்குப் பிடித்த ஜீன்ஸ் சொக்காவையே வாங்கிவிட்டதால், தீபாவளி எப்போது வரும் என்று ரொம்ப ஆசையாய் காத்திருந்தான். தீபாவளியும் வந்தது.

புது சொக்காயை உடுத்திக் கொண்டு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று காண்பித்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தான்.

காசி போட்டிருப்பதைப் போலவே நீலக் கலரில் ஜீன்ஸ் துணியில் தைத்த சட்டையும் பேண்ட்டும் போட்டிருந்தான், அந்த ஊர்த்தலைவர் மகன்.

அதே மாதிரி சட்டையை தானும் போடணும் என்பது தான் காசியின் ரொம்ப நாள் ஆசை!

அந்த ஆசை இன்று நிறைவேறியதை நினைத்து அந்த நிலாவையே பிடித்துவிட்ட மாதிரி சந்தோஷத்தில் குதித்துக் கொண்டே ஓடினான் காசி. ஏதோ ஒரு சினிமாப் பாடலை சத்தம்போட்டுப் பாடிக் கொண்டே ஆடவும் செய்தான்.

“இந்தப் புதுச் சொக்காயை எப்படியாவது தலைவர் மகன் கிட்டே காண்பிக்கணும்..

அவன் வீடு மெயின் ரோட்டுல இருக்குது... அங்க போனா, ஆத்தா காலை ஒடிச்சு, அடுப்புக்குள்ள வச்சிடுவேன்னு அடிக்க வருமே... ம்..ம்... எப்படியாவது காண்பிச்சே ஆகணும்” என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டே ஊருக்கு வெளியே தள்ளி இருக்கும் தலைவர் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அப்பொழுது, எதிர்வீட்டு முருகன் இவனைப் பார்த்து விட்டான். காசியின் சட்டையைப் பார்த்து அதிசயத்துடன்...

“காசி, அப்படியே நம்ம தலைவர் வீட்டுப் பையன் சட்டை மாதிரியே அச்சா, அட்டகாசமா இருக்குடா...' என்று சொன்னதும் காசி சந்தோஷத்தின் எல்லைக்கே சென்றுவிட்டான்.

“டவுனுல போய் எடுத்தோம்... ஐந்நூறு ரூபாயாக்கும்!” என்றான் காசி. முருகன் காசியின் சட்டையைத் தொட்டுப் பார்க்க முயற்சித்தான்...

“டேய்... தொடாத... அழுக்காயிடும்... நான் தலைவர் வீட்டுக்குத்தான் போறேன்... வரட்டுமா” என்று சொல்லி விட்டு, தெருவைக் கடந்து சாலையில் நடக்கலானான்.

எதிரே வந்த லொறி, இவன் மீது வீதியில் தேங்கியிருந்த மழைநீரை வாரி இறைத்து விட்டுப் போனது....

லொறி சாரதியை திட்டிக் கொண்டே, ஒரு கல்லை எடுத்து லொறி மீது வீசினான். அதற்குள் லொறி போயே போய்விட்டது.

பக்கத்திலிருந்த குளத்திலிருந்து தண்ணீரை எடுத்து சட்டையைச் சிறிது சிறிதாக, மிகவும் கவனத்துடன் அலம்பினான் காசி. ஓரளவுக்குச் சட்டையில் படிந்த அழுக்கு மறைந்து போனது.

மீண்டும் வீதியில் நடக்கலானான். இல்லையில்லை... ஒரு மாதிரி ஸ்டைல் நடை... காலைப் பின்னிப் பின்னி நொண்டியடிப்பது போல அசத்தலான நடை... கூடவே விசிலடித்துக் கொண்டே சந்தோஷம் கொப்பளிக்கச் சென்றான்.

தலைவர் வீடு வந்தது. தலைவர் மகன் பளபளவென கண்களைப் பறிக்கிற மாதிரி வெல்வெட் துணியால் தைத்த சட்டை போட்டிருந்தான். நிறையப் பட்டாசுகளை வைத்துக்கொண்டு ஒரு சரத்தைக் கொளுத்திக் கொண்டிருந்தான்.

காசி, தன் சொக்காவைப் பார்த்து ஆஹா... ஓஹோன்னு... புகழப்போறான் என்ற நினைப்பில், அவன் பார்க்கிற மாதிரி அருகில் போய் நின்று கொண்டான்.

தலைவர் மகனோ, சேரிக்காரப் பய, தன்னைப் போல உயர்ரக சட்டை போட்டிருக்கானே என்ற எரிச்சலில்

“ஏய்... அந்தப் பக்கமா போடா... இங்க என்ன வேடிக்கை? வெடி மத்தாப்பெல்லாம் திருட வந்திருக்கியா... திருட்டுப்பயலே... எங்கப்பாகிட்டே சொன்னேன்னா, உங்க குடும்பத்தையே ஊரைவிட்டு துரத்திப்புடுவாரு... ஓடிப் போடா...' என்று கத்தியபடி, காசியை விரட்டினான்.

அப்போதுதான் எதிர்பாராமல் அது நடந்தது....

தலைவர் மகன் கொளுத்திப் போட்ட சரவெடியில் ஒன்று அவன் மீதே பட்டு வெடித்தது. அவன் அணிந்திருந்தது வெல்வெட் துணியாலான சட்டையாக இருந்ததால் குபுக்கென்று தீ பற்றிக் கொண்டது.

“ஐயோ... அம்மா...!” என்று தலைவர் மகன் அலறினான்.

சத்தம் கேட்டு, வீட்டுக் குள்ளிருந்து ஓடிவந்த தலைவரும் வேலையாட்களும் என்ன செய்வது என்று தெரியமால் ஒரு நொடி பரிதவிக்க, காசி சட்டென்று தனது ஜீன்ஸ் சொக்காவைக் கழட்டினான்.

அதைத் தலைவர் மகன் மீது போர்த்தி, அவனைக் கீழே தள்ளி, தரையில் அங்கும் இங்குமாக உருட்டினான்.

சிறிது நேரத்தில் தீ அணைந்துவிட்டது.

சிறிய காயத்தோடு தலைவர் மகன் பிழைத்துக் கொண்டான்.

சிறிது நேரத்திற்கு முன் திருட்டுப் பயலே என்று திட்டியும், பற்றி எரிந்த தீயிலிருந்த தன் உயிரைக் காப்பாற்றிய காசியைப் பார்த்தான் தலைவர் மகன்.

அவனுக்கு மிகவும் வெட்கமாகப் போய்விட்டது. ஆனாலும் முகத்தில் நன்றி தெரிந்தது.

காசிக்கோ, தீ பட்டதால் ஆங்காங்கே பொத்தல் விழுந்தும் பாதி கருகியும் போன தனது ஜீன்ஸ் சொக்காவைப் பார்த்து இனி அடுத்த தீபாவளி எப்போது வரும்? என்ற ஏக்கத் தீ பற்றிக் கொண்டது!

## அறிந்து கொள்வோம்

- சில ராணித்தேனீக்கள் வயதானவர்களைப் போல பிதற்றிக்கொண்டே இருக்கும்!
- ஒரே இரவில் வெளவால் 3 ஆயிரம் பூச்சிகளைக் கூட தின்னும்.
- ஒட்டகங்களைப் போல ஒட்டகச்சிவிங்கிகளும் சில நாட்களுக்கு நீரில்லாமலே வாழ முடியும். இவற்றின் திசுக்களில் தண்ணீர் சேமிக்கப்படுகிறது.
- 13 வயதில், நம் கண்கள் வளர்வது நின்று விடுகிறது. ஆனால், மூக்கும் காதுகளும் வளர்ச்சியை நிறுத்துவதில்லை.
- ஆண் குதிரைக்கு 40 நிலையான பற்கள் இருக்கும். பெண் குதிரைக்கு 36லிருந்து 40 வரை.
- உலகிலேயே அதிக முறை பாடப்பட்ட பாடல்: 'ஹேப்பி பர்த்டே டூ யூ!'



என் பையன் பண்ண காரியத்துனால என்னால வெளியே தலை காட்ட முடியலை..”

“அப்படி என்ன பண்ணிட்டான்..?”

“என்னோட விக்கை எடுத்து அவன் போட்டுக் கிட்டுப் போயிட்டான்..”

## விடுகதைகள்

- முட்டையிடும், குஞ்சு பொரிக்காது. கூட்டில் குடியிருக்கும், கூடு கட்டத் தெரியாது. குரலில் இனிமையுண்டு, சங்கீதம் தெரியாது! – அது என்ன?

குயில்

- வாயிலிருந்து நூல் போடுவான் மந்திரவாதியும் இல்லை கிளைக்குக் கிளை தாவுவான் குரங்கும் இல்லை வலைவிரித்துப் பதுங்கியிருப்பான் வேடனும் இல்லை – அவன் யார்?

சிலந்தி

- கறுப்பு நிறமுடையவன் கபடம் அதிகம் கொண்டவன் கூவி அழைத்தால் வந்திடுவான் கூட்டம் சேர்த்தும் வந்திடுவான் – அவன் யார்?

காகம்

- கடைசி வார்த்தையில் மானம் உண்டு. முதல் வார்த்தையின் மென்மைக்காக இறந்தன பூச்சிகள் காஞ்சியில் நான் யார்?

பட்டுத்துணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றே குலமென்று பாடுவோம் ஒருவனே தெய்வம் என்று போற்றுவோம். ~ *கவிஞர் புலமைப்பித்தன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மதமாற்றத் தடைச்சட்டத்தை கொண்டு வர வேண்டும்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்... என்று ஒரு புலவன் பாடி மகிழ்ந்தான். இங்கு பெற்ற தாய் என்பது தனித்து பெற்றவளை மட்டும் குறிப்பிடுவதன்று.

மாறாக தாய்மொழி, தாய்ச்சமயம், தாய் நாடு என எல்லாவற்றையும் பொருள்படுத்தியே பெற்ற தாய் என்று பெருமையாகக் கூறிக் கொண்டான் அந்தப் புலவன்.

இதன் வழி பெற்ற தாய், பெற்ற தந்தை என்ற பெயர்களை யாரும் மாற்ற முடியாது.

ஒரு பிள்ளையை பெற்றவர்கள் வளர்க்க வில்லை என்றால், அந்தப் பிள்ளையை வளர்ப் பவர்கள் பாதுகாவலர்கள் என்றாகின்றனர். குழந்தையைத் தத்தெடுத்தால் வளர்ப்புத் தாய், வளர்ப்புத் தந்தை என்றாகிறது.

தவிர; ஒரு பிள்ளை பிறந்தால், பிறப்புச் சான்றிதழைப் பதிவேற்றம் செய்வதற்குப் பெற்ற வர்களின் பதிவுத் திருமணச் சான்றிதழ் தேவைப்படுகிறது. கூடவே தந்தை கையொப்ப மிடுகின்ற முறையும் உண்டு.

இதில் குறிப்பிட்ட சான்றிதழ் இல்லையா யின் பிறப்புச் சான்றிதழ் பதிவாக முடியாது போகும்.

இதேபோன்று ஒரு பிள்ளை தான் பிறந்த இனத்தை, தன் தாய்மொழியை மாற்றிப் பதிவ தும் முடியாத காரியம்.

அதாவது சிங்கள இனத்தில் பிறந்த ஒரு வர் தன்னைத் தமிழர் என்றோ அல்லது தமி ழர் ஒருவர் தன்னை சிங்கள இனத்தவர் என்றோ விண்ணப்பிப்பது தவறான தகவலின் பாற்பட்டதாகும்.

ஆக பெற்றவர்கள், பிறந்த இடம், பிறந்த நாடு, தாய்மொழி, இனம் என எவற்றையும் மாற்றுவது முடியாத காரியமாக இருக்கின்ற போதிலும் சமயத்தை மட்டும் யாரும் மாற்றிக் கொள்ளலாம் என்றால், இது எந்த வகையில் நியாயமாகும்.

பெற்றோர், இனம், மொழி, நாடு என்ப வற்றை மாற்ற முடியாது என்று வரையறை செய்த மேற்குலகம் சமயத்தை மட்டும் விரும் பியவாறு மாறலாம் என்று சுதந்திரம் கொடுத் தது எனில், அதன் உள்நோக்கம் என்ன என்ப தைப் புரிந்து கொள்வது கடினமன்று.

சரி, திருமணம் செய்த தம்பதிகள் பிரிந்து செல்வதென்றால் நீதிமன்றத்தை நாடி சட்டப் படி விவாகரத்துப் பெறவேண்டும். ஒரு பிள் ளையைத் தத்தெடுப்பதென்றாலும் நீதிமன்றத் தின் அனுமதியை உரியவாறு பெற்றாக வேண் டும்.

இதேபோன்று வைத்த பெயரை மாற்றம் செய்வதாக இருந்தால் உரிய ஆவணங் களைச் சமர்ப்பித்து பதிவாளர் திணைக்களத் தின் அனுமதியைப் பெறும்போதே சட்ட அங்கீ காரம் கிடைக்கும்.

ஆனால் மதமாற்றம் என்றால் மட்டும் வீட் டில் இருக்கின்ற பிள்ளையார் படத்தை, முரு க ன் படத்தை உடைத்து, சாத்தான் ஒழிந்து போகட்டும் என்று திட்டித் தீர்த்தால் அது போதும்.

இதுதவிர, மேலதிக தகைமையாக சைவ சமயத்தை நிந்தை செய்வது; சைவக் கட வுளை கேலி செய்வது என்பன மதமாற்றத்தின் பால் காட்டும் விசுவாசமாகும்.

இவ்வாறாக, தான் பிறந்த தாய்ச் சமயத்தை யார் நினைத்தாலும் எப்போதும் கைவிடக் கூடியதாக இருப்பது மிகப்பெரும் துரதிர்ஷ்ட மாகும்.

எனவே மதமாற்றம் என்பதைத் தடை செய் வது மிகவும் அவசியமானதாகும். மதமாற்றம் தடுக்கப்படாவிடில் இந்த நாட்டின் ஆதிச் சம யங்களின் ஆயுட்காலம் சொற்பமானதாகவே இருக்கும்.

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்'

# தேசிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் 2ம் கட்டம் நேற்று மட்டக்களப்பில் ஆரம்பம்

"நாட்டிற்காக ஒன்றிணை வோம்" தேசிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டம் மட்டக்களப்பு மாவட் டத்தை மையப்படுத்தி நேற்று ஆரம்பமானது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக் கும் வழிகாட்டலுக்கும் அமைய ஜனாதிபதி செயலகத்தினால் நெறிப்படுத்தப்படும் தேசிய அபிவிருத்தி கருத்திட்டங் களான வறுமை ஒழிப்பு, கிராமசக்தி செயற்றிட்டம், போதைப்பொருள் ஒழிப்பு தேசிய செயற்றிட்டம், சிறுவர் களை பாதுகாப்போம் தேசிய செயற்றிட்டம், சிறுநீரக நோய் நிவாரண செயற்றிட்டம், தேசிய உணவுற்பத்தி செயற் றிட்டம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு செயற்றிட்டம் உள் ளிட்ட விசேட செயற்றிட்டங் கள் வெவ்வேறு அமைச்சுக் களினால் நடைமுறைப் படுத் தப்பட்டுள்ள தேசிய அபி விருத்தி செயற்றிட்டங்களை யும் மற்றும் சமூக நலன்புரி செயற் திட்டங்களையும் வினைத்திறனாகவும் பய னுள்ள வகையிலும் நடை முறைப்படுத்தி கிராமிய மட் டத்திலிருந்து மாவட்டம் வரையிலான மக்களுக்கு உயர்ந்தபட்ச மக்கள் சேவை யையும் அனுகூலங்களை யும் பெற்றுக்கொடுத்தலே "நாட்டுக்காக ஒன்றிணை வோம்" செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

அரச நிறுவனங்களினால் தீர்வு காணப்பட வேண்டிய மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அரச பொறி முறையினூடாக உயர்ந்த பட்ச வினைத்திறனுடன் அப் பிரச்சினைகளை தீர்ப்பதற் கான உடனடி நடவடிக்கை களும் இச்செயற்றிட்டத்தினூ டாக மேற்கொள்ளப்படுகின் றன.

அதன் முதலாவது வேலைத்திட்டம் அண்மை யில் புத்தளம் மாவட்டத்தை மையப்படுத்தியதாக இடம் பெற்றதோடு, எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் மாவட்ட மட்டத்தில் வேலைத்திட்டங் களை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ம)

மாகாண சபை தேர்தல் தொடர்பில்

# உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோருக

## மகிந்த தேசப்பிரியவுக்கு ஜனாதிபதி கடிதம்

மாகாண சபைத் தேர் தலை, எந்தச் சட்டத்தின் கீழ் நடத்த முடியும் என்பது தொடர் பில் உயர்நீதிமன்றத்தின் விளக்கத்தினைக் கோரு மாறு, தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையினை கடிதம் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் விடுத்துள்ளார்.

மாகாண சபைத் தேர் தலை, எந்தச் சட்டத்தின் கீழ் நடத்துவது என்பது தொடர் பில், சட்டரீதியிலான சிக்கல் கள் ஏற்பட்டுள்ளன என்ப தால், அதனைத் தெளிவு படுத்திக் கொள்வதற்கே மேற் படி கடிதம் அனுப்பி வைக் கப்பட்டுள்ளதாக, அக்கடிதத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது

அரசியலமைப்பின் பிர காரம் தேர்தல்களை நடத்து வதற்குத் தேவையான நிலைமையை ஏற்படுத்தி கொடுக்குமாறு ஜனாதிபதி யிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளதுடன் அதற்கான இயலுமையும் ஜனாதி பதிக்கே உள்ளதெனவும் குறித்த கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது. குறித்த விவ காரம் தொடர்பில் உயர் நீதி மன்றத்தின் விளக்கத்தினை ஜனாதிபதியால் மட்டுமே பெற்றுக்கொள்ளப்பட முடியும் என்பதனால் அதற்கு நட வடிக்கை எடுக்குமாறு கோரி யுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலை வர் அந்தக் கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளார். (ம)

## வயல் விழா இன்று

திருநெல்வேலி மாவட்ட விவசாய தொழில்நுட்பங் களை வெளிப்படுத்தும் வயல் விழா நிகழ்வு இன்று செவ் வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பலாலி வீதி திரு நெல்வேலியில் அமைந் துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடை பெறவுள்ளது. (ம-10)

## அவசர கலந்துரையாடல்

வட மாகாண தொண்ட ராசியர்களின் பெயர் விபரங் கள் மீளாய்வு செய்யப்பட வுள்ளதால் தங்களின் ஆவ ணங்களுடன் இன்று காலை 9 மணிக்கு ஆரியகுளம் உயர் கல்லூரி மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு வட மாகாண தொண்டராசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ம)

# புதுவருடச் சந்தை

(கரணவாய்)

கரவெட்டி கமநல சேவை நிலையத்தினரால் கமக்கார அமைப்புக்கள் மற்றும் மக ளிர் கமக்கார அமைப்புக்க ளின் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத் தும் விவசாயிகள்சந்தை எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கரவெட்டி கம நல சேவைகள் நிலையத் தில் நடைபெறும்.

விற்பனையாளர்கள், கொள்வனவு செய்வோர் களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள் ளது. (5-60)

# கமநலசேவை நிலையத்தால் ஏக்கர் வரி அறவீடு - 2019

(யாழ்ப்பாணம்)

கைதடி கமநல சேவை கள் நிலையத்தினால் பின்வ ரும் திகதிகளில் குறித்த கமக் கார அமைப்பு பிரிவுகளுக்கு குறித்த பிரதேசத்தில் ஏக்கர் வரி அறவீடு மேற்கொள்ளப் படவுள்ளது.

எனவே நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயி கள் தங்களது கடந்த வருட ஏக்கர் வரி பற்றுச்சீட்டையும் உறுதியின் போட்டோ பிரதி யையும் அல்லது குத்தகைக் கடிதத்தையும் கொண்டு வரு மாறு அறிவிக்கப்பட்டுள் ளது.

இன்றும் நாளையும் ஜே/ 298 மறவன்புலோவைச் சேர்ந்தவர்கள் சாவகச்சேரி யிலுள்ள தலைவர் இல்லத்தி லும் ஜே/299 தனங்கிளப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் சாவகச்சேரியிலுள்ள தனங் கிளப்புத் தலைவர் இல்லத்தி லும் ஜே/315 சந்திரபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் சந்திரபுரம் பொதுநோக்கு மண்டபத்திலும் தங்களது ஏக்கர் வரியைச் செலுத்து மாறு அறிவிக்கப்பட்டுள் ளது. (5)

# குளிக்கச் சென்றவர் மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தைச் சேர்ந்த நபரொருவர் மாரடைப்பால் நேற்று முன்தினம் உயிரிழ ந்துள்ளார்.

கொடிகாமம் கோயிலாம னையைச் சேர்ந்த சி.சற்கு ணரத்தினம் (வயது - 53) என்ற நபரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது.

குளிப்பதற்காகச் சென்ற வேளையில் நெஞ்சுக்குள் வலிப்பதாகத் தெரிவித்ததை யடுத்து உறவினர்களால் சாவகச்சேரி வைத்தியசாலை க்குக் கொண்டு செல்லப்பட் டார்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழி யிலேயே குறித்த நபர் இறந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

உடற்கூற்றுப் பரிசோத னையை தென்மராட்சிப் பிர தேச திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.இளங்கீரன் மேற்கொண்டார். (7-10)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- அறிவோடு செய்யும் செயல்களில் பிழைகள் வராது.
- நம்மிடத்தில் ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப் போல, அதை விலக்கும் சக்தியும் நம்மிடம் உள்ளது.
- மனிதனின் பண்பை உருவாக்குவதில் இன்பம், துன்பம் இரண்டும் சமபங்கு வகிக்கிறது.
- இன்பத்தைக் காட்டிலும் துன்பமே மனிதனுக்கு சிறந்த பாடத்தைக் கற்றுத் தருகிறது.
- அன்பின் மூலமாகச் செய்யப்படும் எந்தச் செயலும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தே தீரும்.
- ஞானம் என்பது மனிதனிடம் இயல்பாக உள்ளது. எந்த ஞானமும் மனிதனுக்கு வெளியில் இருந்து வருவதில்லை.
- தன்னைத் தானே வெறுக்கக் கூடாது. வெறுப்புணர்வு அழிவுக்கான வாசலைத் திறந்து விடும்.
- இனிய சொர்க்கம் கருணையே. எனவே, அனைவரும் கருணை மிக்கவர்களாக மாறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட அமரர் காசிப்பிள்ளை ஞாபகார்த்த கராத்தே சுற்றுப் போட்டியில் கொழும்பு, கண்டி மாவட்டங்களைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட கராத்தே அணிகள் பங்கு கொண்டன. வடமாகாணத் தில் இருந்து பங்கு கொண்ட சக்குறா சோட்டோகான் கராத்தே கழக மாணவர்கள் 7 தங்கம், 8 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர். (க)

# தனேஸ் ஹற்றிக் கோல்
## யங்கென்றிஸ் அணி சம்பியன்



இளவாலை யங்கென்றிஸ் தனேஸ்சின் ஹற்றிக் கோல்களால் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

BEES விளையாட்டு கழகத்தின் யாழ்.லீக்கின் அனுமதியோடு நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்திய ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இளவாலை யங்கென்றிஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதியது. மிகவும் சிறப்பாகவும் துடிதுடிப்பாகவும் ஆட்டம் நடைபெற்றது.

தனேசின் ஹற்றிக் கோல் விளையாட்டை மேலும் வலுப்படுத்த ஞானரூபனின் 02 கோல்களும் யங்கென்றிஸ் ஆட்ட நேர முடிவில் 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

தனேஸ் 3 கோல்களும் விளாசித்தள்ள ஞானரூபன் இரு கோல்களை அடித்து அசத்தினர்.(க-106)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்








மாவை மத்திய சனசமூக நிலையம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நிகழ்த்திய வருடாந்த பாரம்பரிய விளையாட்டு விழா கடந்த 7 ஆம் திகதி நடைபெற்றது. (படங்கள்:- செ.கலையன்பன்)









அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 79 ஆம் ஆண்டு விழா நிகழ்வுகள் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் ஆண்களுக்கான, பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் மற்றும் சிறுவர்களுக்கான நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க)



சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக 2019 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு போட்டியில் ஆண், பெண் இருபாலாருக்கான கரப்பந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. இதில் ஆண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் மத்தி இளைஞர் கழகம் முதலாம் இடமும் சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன. பெண்கள் பிரிவில் இளவாலை இளைஞர் கழகம் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை ஆதீன...

ஆதீனத்தில் இடம்பெற்றது.

யாழ் மாவட்டம் உள்ளிட்ட வடமாகாணத்தில் இந்துக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பில் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதுடன், வடமாகாணத்தில் அண்மைக்காலமாக மதங்களுக்கிடையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பிலும் அதனை எவ்வாறு இல்லாமல் செய்து வடமாகாணத்தில் இனங்களுக்கிடையிலான நல்லுறவினை கட்டியெழுப்ப முடியும் என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மேலும், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தினை புனிதபூமியாக பிரகடனப்படுத்துமாறு ஆலய நிர்வாக சபையினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட ஆளுநர், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு எதிர்வரும் சில நாட்களில் ஆலய நிர்வாகத்தினரையும் பிரதம குருக்களையும் சந்திக்க இருப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இது தொடர்பில் கலந்தாலோசிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை வடமாகாணத்தில் வசிக்கும் இந்து மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இந்து மாநாடு ஒன்றினை நடத்துவது தொடர்பிலும் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதுடன் மிகவிரைவில் வடக்கில் இந்து மாநாடொன்றை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது, ஆளுநர் முன்னெடுக்கும் செயற்பாடுகள் மக்களுக்கு மிகுந்த ஆக்கபூர்வமாக காணப்படுவதனை தான் உணர்ந்துள்ளதாக குறிப்பிட்ட நல்லை ஆதீன குரு முதல்வர் மக்களுக்கான இந்த பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (ம-3)

## காணிகள் எத...

யாழ் மாவட்டத்தில் இராணுவம் மற்றும் கடற்படையினருக்கென மேலும் 43 இடங்களில் காணி சுவீகரிக்கப்படவுள்ளதாக காணி அமைச்சில் இருந்து நில அளவை திணைக்களத்தினருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

சுவீகரிக்கப்படும் காணிகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெறப்படும் வரை படையினருக்காக காணி சுவீகரிக்க முடியாது என யாழ் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது. அதில் காணி சுவீகரிப்பு தொடர்பான விடயம் பேசப்பட்ட போது சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரால் மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

குறித்த அறிவிப்பு பிரதேச செயலருக்கு காணி அமைச்சால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதில் பிரதேச செயலரின் சிபாரிசு கோரப்படவில்லை. சிலர் தமது சம்மதத்துடன் காணிகளை கையளித்துள்ளார்கள்.

அந்த படிமுறை தொடர்பில் முதலில் ஆராய வேண்டும் அதன் பின்னர் ஆட்சேபனை தெரிவிக்க முடியும் அளவீடுகள் மேற்கொண்ட பின்னரும் சுவீகரிப்பதை தடுக்க முடியும். அது போன்றே மண்டைதீவு காணி அளவீடும் தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்துக்கான காணிகள் தொடர்பில் கவனத்தில் எடுக்க வேண்டும். பொலிஸ் நிலையங்கள் உருவாக்கப்படுவது அத்தியாவசியமானது என சுமந்திரன் தெரிவித்தார். 43 இடங்கள் சுவீகரிக்கப்படவுள்ள விடயம் எமக்கு பாரிய பிரச்சினையாக உள்ளது.

இது தொடர்பில் எமக்கு அறிவிக்கப்படவில்லை. காணி சுவீகரிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் பிரதேச செயலர்கள் சிபாரிசு செய்யாமல் நில அளவைக்கு ஆயத்தம் மேற்கொள்ளும் போது பிரதேச செயலர்கள் மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் எதிர்ப்பு தொடர்பில் அறிவிக்க வேண்டும் என இணைத்தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராசா தெரிவித்தார்

அதனை தொடர்ந்து மேற்கொண்ட கலந்துரையாடலை தொடர்ந்து முதலில் எந்தெந்த இடங்கள் சுவீகரிக்கப்படவுள்ளது என மக்கள் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும் குறித்த இடங்கள் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் தான் காணி சுவீகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்றும் யாழ் மாவட்டத்தில் இராணுவம் கடற்படைக்கு என சுவீகரிக்கப்படவுள்ள குறித்த 43 இடங்கள் தொடர்பிலும் அந்தந்த பிரதேச செயலாளர்கள் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அது வரை அளவீடுகள் நிறுத்தப்படவேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## ஜனாதிபதி மைத்...

தலைமை எடுப்பதாக தெரிவிக்கப்படுகிறது. ஐ.தே.மு அரசை நெருக்கடிக்குள்ளாக்கும் விதமாக ஜனாதிபதி அடுத்தடுத்து எடுக்கும் அதிரடியான முடிவுகளை கட்டுப்படுத்தவே இந்த நகர்வு முன்னெடுக்கப்படுகிறதென தெரிகிறது. குற்றவியல் பிரேரணை தொடர்பாக ஏற்கெனவே ஐ.தே.க எம்.பிக்கள் இரண்டு சுற்று பேச்சு நடத்தியதாகவும் தெரிய வருகிறது. (ம-3)

## அறிக்கையில்...

குழு வழங்கிய அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநரால் மாகாண பிரதம செயலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி பொறியியலாளர் ரகுநாதன் தலைமையிலான குழு சமர்ப்பித்த பரிந்துரை அறிக்கையை பிரதம செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், ஆளுநரின் செயலாளரைப் பணித்துள்ளார். (ம-3)

## நாங்கள் நினை...

நிறைவேறியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நாங்கள் நினைத்தால் இந்த அரசை எந்நேரத்திலும் கவிழ்ப்போம். அதனால் தமிழ் மக்கள் தாங்கள் உரிமைகளை அனுபவிக்க இந்த அரசு இடமளிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

நாங்கள் அரசைப் பாதுகாத்து வருகின்றோம் என்று வெளியில் சிலர் விஷமத்தனமான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். உண்மையில், அரசைப் பாதுகாப்பது எமது நோக்கம் அல்ல.

தமிழர்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கவும், நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வைக் காணும் வகையிலும்தான் இந்த அரசுக்கு நாம் ஆதரவு வழங்கி வருகின்றோம்.

இதை அரசுடன் நாம் நடத்தும் பேச்சுகளின்போது தெளிவாகக் கூறியுள்ளோம். அதை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும். இல்லையேல், அரசுக்கான எமது ஆதரவை விலக்கிக்கொள்வோம். அப்போது அரசு கவிழ்ந்தே தீரும்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தபோதிலும், தற்போது அந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அந்தப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு அரசிடம் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளையும் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு அரசிடம் நாம் கோரியுள்ளோம். ஐ.நா. ஊடாக அரசுக்கு அழுத்தம் வழங்கி வருகின்றோம்.

ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு உதாசீனம் செய்தால் அதன் விளைவு மிகவும் பாரதூரமானதாகவும் மோசமானதாகவும் இருக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (ம-3)

## யாழில் 43 இட...

காணிகளை அளவீடு செய்வதற்கான அனுமதிகளை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வழங்க முடியாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். (ம-3)

## வட மாகாண...

மருத்துவர் மன்றம் நேற்றைய தினம் தன்னிலை விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

வட மாகாண மருத்துவர் மன்றத்தால் அனுப்பி வைக்கப்பட்ட தன்னிலை விளக்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுகாதார அமைச்சருடனும் சுகாதார அமைச்சு அதிகாரிகளுடனும் வடமாகாண மருத்துவர் மன்றம் 28.03.2019 கலந்துரையாடிய விடயங்கள் சம்பந்தமாக எந்தவொரு பத்திரிகைக்கும் உத்தியோகபூர்வமாக எமது மன்றம் செய்தி வழங்கவில்லை.

ஆயினும் எமது மன்றத்தின் பெயரால் வெளியாகியுள்ள மேற்படி செய்திக்கும் எமக்கும் தொடர்பில்லை என்பதுடன் எமக்கு சங்கடத்தை ஏற்படுத்தக்கூடியதும் முக்கியமாக, உண்மையில்லாத பல விடயங்களையும் அச்செய்தி உள்ளடக்கியுள்ளது.

இந்தச் செய்தி எமது உறுப்பினர்கள் மத்தியில் குழப்பத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் நீண்ட காலமாக, யுத்த காலத்திலிருந்து அர்ப்பணிப்புடன் வடக்கு மாகாணத்தின் சகல மாவட்ட மக்களுக்கும் சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற வைத்திய நிபுணர்களின் மனதையும் புண்படுத்துவதாய் அமைந்துள்ளது.

எமது மன்றத்திற்கும் அச்செய்திக்கும் தொடர்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என மருத்துவர் மன்றத்தின் தன்னிலை விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கூட்டமைப்பின...

வரவு- செலவு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கியமைக்காக அவர்களை குறைகூற முடியாது என பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் இந்த செயற்பாடு ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று என தெரிவித்த அவர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் சுதந்திரகட்சி விலகிக் கொண்டமை தொடர்பில் பல சந்தேகங்கள் தோன்றியுள்ளன என்றும் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

## சுதந்திரக்கட்சி...

யத்தின் போது ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறினார்.

எதற்கும் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட வேண்டுமே எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)




**மஹஜன சம்பத**

திகதி 2019/04/08
சீட்டிழுப்பு இலக்கம் 3893
ஆங்கில எழுத்து: V
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 2 1 1 3 5 2
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**

திகதி 2019.04.08
சீட்டிழுப்பு இலக்கம் 2088
ஆங்கில எழுத்து: C
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 10 12 45 74

**சுபிரி வாசனா**

திகதி 2019/04/08
சீட்டிழுப்பு இலக்கம் 1419
எழுத்து: 13
வெற்றி இலக்கம்: 02 13 51 61
34 56
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**

திகதி 08/04/2019
சீட்டிழுப்பு இலக்கம் 367
M 18
வெற்றி இலக்கங்கள்: 25 32 46 53
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர்...

சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறை கொற்றாவத்தையை சேர்ந்த அப்துல் ரசித் அகமட் ரம்சின் (வயது 33) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

தீக்காயத்துக்குள்ளானவரை உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற குடும்பத்தினர் மேலதிக சிகிச்சைக் காக அன்று இரவே யாழ் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

## அதிக வெப்பம் காரணமாக...

எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் பொகவந்தலாவ பிரதேச வைத்திய அதிகாரி ஏ.எஸ்.கே.ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

குறித்த நோய்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களும் பெரியோர்களும் வைத்தியசாலைக்கு வருகை தந்து சிகிச்சை பெற்றுச் செல்வதோடு, வைத்திய சாலையில் தொடர்ந்தும் தங்கிச் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்தனர்.

கொதித்து ஆறிய நீரைப் பருகுமாறும் மல சலகூடத்துக்குச் சென்று வந்த பிறகு, சவர்க் காரமிட்டு இரண்டு கைகளையும் நன்றாகக் கழுவுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் நீர் அருந்தும் அளவை அதிகரித்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-3)


**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



(C-6917)

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**SUNJEY'S HOLDINGS**

**யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்**



புதுவருடத்தை முன்னிட்டு

100% இயந்திர மோட்டார்

பெட்ரோல் தேவையில்லை.
சூழல் மாசடையாது.
எண்ணெய் மாற்றத்தேவையில்லை.
புகை பரிசோதனை தேவையில்லை.

| DESCRIPTION OF BIKE | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20 AH |
| Charging Voltage | AC 220V |
| Max Load | 120-140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost For One Full Charge | ONE UNIT |
| One Time Charge | 4-6 HRS |

நம்பமுடியாத விலையில்
மாபெரும் விலைக்கழிவு

உங்கள் பணப் பையில் பணத்தை மேலதிகமாக சேமிக்க முடியும்

85,000 ரூபாய் மட்டுமே
(கையிருப்பு உள்ள வரை மட்டுமே!!)

#0.30/- சதம் 1 Km இயங்கும் செலவு

(ஒரு முறை சார்ச்சுக்கு ஏறத்தாழ 40 கிலோமீற்றர்)

இல. 98, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)

(C-6043)

021 205 3077, 0777 474 111

Credit, Debit Card Accept

**FLC FRENCH LANGUAGE CENTRE**

**பிரெஞ்சு**

(C-5920)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

**போட்டிப் பரீட்சை மாலை நேர வகுப்புக்கள்**

பொது உளச்சார்பு
மொழித்திறன்
பொது நுண்ணறிவு

செவ்வாய், புதன், வியாழன்
பி.ப 4.45 - 6.45

(C-6044)

0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரிவீதி கொமர்ஷல் வங்கியருகில்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(8408)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

பகுதிநேரமாகப் பணியாற்றக் கூடிய 40-60 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை.

சுண்டுக்குளி பகுதியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 077 375 4490, 077 220 2769

(C-6034)

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்**

எமது தனியார் நிறுவனத்தில் O/L, A/L தகைமைகளுடன் பணிபுரியலாம்
உலகில் எப்பாகத்திலும் உமது திறமைகளை வெளிக்காட்டலாம்.

● முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகியோருக்கு முன்னுரிமை.
● உணவு, தங்குமிட வசதிகள் உண்டு ● வயதெல்லை 18 - 30
● ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(C-6039) 077 123 7692

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**

**திருமண பட்டுப் புடவைகளின் பூங்காவனம்**

**இந்தியன் செலக்ஷனின்**



(C-6022)

**சித்திரைப் புத்தாண்டு விசேட தள்ளுபடி....**

கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச்சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் பல புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்.

**இம்முறை சித்திரைப் புத்தாண்டை இந்தியன் செலக்ஷனுடன் குதூகலமாகக் கொண்டாடுங்கள்.**

| | | |
|---|---|---|
| பட்டுச்சாறி | - 15000/- | 7500/- |
| கொட்டன் சாறி | - 1800/- | 1000/- |
| கொட்டன் (Top) | - 1500/- | 1000/- |
| டெனிம் (Top) | - 1500/- | 1000/- |
| பார்ட்டி புரொக் (பெரியது) | - 5000/- | 3500/- |
| பார்ட்டி புரொக் (சிறியது) | - 3500/- | 2500/- |
| கொட்டுன் சல்வார் | - 5000/- | 2000/- |
| நெற் சல்வார் (பெரியது) | - 5000/- | 2000/- |
| நெற் சல்வார் (சிறியது) | - 3500/- | 1000/- |

புத்தம் புதிய டிசைன்கள்
விசேட விலைக்கழிவுகள்

காலம் : 23.03.2019 - 14.04.2019

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**கடை வாடகைக்கு விடப்படும்**

கஸ்தூரியார் வீதியில் முதலாம் மாடி தொகுதியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு விடப்படும்.

தொடர்புக்கு : 077 386 8565
யாழ்ப்பாணம்.

(8399)

**உடனடி வேலைவாய்ப்பு**


யாழ் நகரில் அமைந்துள்ள விநியோக நிறுவனம் ஒன்றிற்கு பணியாளர் தேவை, பதிவாளர் / கணனி இயக்குநர். O/L, A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை 18-30 வரையாகும்

தொடர்புகளுக்கு :
077 516 4928, 021 221 5777

(8409)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 10.03.2019 ஞாயிற்றுக்கிழமையன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் சுந்தரம் ஈஸ்வரதாஸ்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 09.04.2019 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விசாலாட்சி பாடசாலை ஒழுங்கை
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.

(8402)

குடும்பத்தினர்
மகன் Dr.சுந்தரேஸ்வரன்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org